பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஐப்பசி13 புதன்கிழமை (30.10.2002) | தொலைபேசி- 2223378 | ஒலி 315

### இரண்டு உலங்கு வானூர்திகளின் மூலம்
## விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் நேற்றுக் கொழும்பு பயணமாகினர்

(கிளிநொச்சி)

தாய்லாந்தில் நாளை அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு நேற்றுப்பிற்கல் தமிழீழ நேரமான 4.25க்கு உலங்கு வானூர்த்தி மூலம் கொழும்புக்கு பயணமானார்கள்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை ஏற்றிச் செல்வதற்கென விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு விசேட உலங்கு வானூர்திகள் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் பி.ப 4.10 மணிக்கு தமிழீழ காவல்துறையின் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில தரை இறங்கின.

தமிழீழ காவல்துறையினரின் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்ட விடுதலைப்புலிகளின் ஒன்பது பிரதிநிதிகளும் இரண்டு பிரிவுகளாக உலங்கு வானூர்திகளில் கொழும்பு பயணமானார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அவரது பாரியார்

(10ம் பக்கம் பார்க்க)

### பிரபாவின் படத்தை எடுத்துச் சென்ற
## பெண் புலிப் போராளிகள் அல்லைப்பிட்டியில்தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் வரிப்புலிச்சீருடை அணிந்த புகைப்படத்தை எடுத்துச் சென்ற இரு பெண்போராளிகளை நேற்றுக் காலை 8மணிமுதல் 9.30மணி வரை அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில் கடற்படையினர் தடுத்து வைத்திருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து அரசியல் வேலைத்திட்டமாக வேலணைக்குச் சென்ற இப் பெண் போராளிகளை அல்லைப்பிட்டிச் சோதனைச்சாவடியில் கடமையிலிருந்த கடற்படையினர் வரிப் புலி சீருடை அணிந்த பிரபாகரனின் படத்தை எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று தெரிவித்து அப்போராளி களை தடுத்து வைத்திருந்ததாகத்

(10ம் பக்கம் பார்க்க)

### தாய்லாந்தில் நாளை 2ம் கட்ட சமாதானப் பேச்சு

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

# அரச - புலிப் பிரதிநிதிகள்
# ஒரே விமானத்தில் பயணம்!





## கட்டுநாயக்காவில் உச்சப் பாதுகாப்பு

(நமது நிருபர்)

**தாய்லாந்தில் நாளை ஆரம்பமாகவுள்ள இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அரச பிரதிநிதிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் இன்று அதிகாலை 2.20 மணிக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமானத் தளத்தில் இருந்து ''கதேபசுபிக்'' என்னும் விமானம் மூலம் தாய்லாந்துக்கு பயணமாகியுள்ளனர்.**

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கடந்த மாதம் இடம் பெற்ற முதற் கட்டப் பேச்சு வார்த்தையை அடுத்து ஒரு மாத கால

**ஹோட்டலுக்குப் பலத்த பாதுகாப்பு**

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கின் மேற்குப் பகுதியில்

''றோஸ் கார்டன்ரிசோர்ட்'' (ROSEGARDEN RESORT) ஹோட்டலில் இப் பேச்சு வார்த்தை நடை பெறவுள்ளது. இதனைய









# கட்டுநாயக்காவில் உச்சப் பாதுகாப்பு

(நமது நிருபர்)

**தாய்லாந்தில் நாளை ஆரம்பமாகவுள்ள இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அரச பிரதிநிதிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் இன்று அதிகாலை 2.20 மணிக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமானத் தளத்தில் இருந்து ''கதேபசூபிக் ''என்னும் விமானம் மூலம் தாய்லாந்துக்கு பயணமாகியுள்ளனர்.**

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கடந்த மாதம் இடம் பெற்ற முதற் கட்டப் பேச்சு வார்த்தையை அடுத்து ஒரு மாத கால இடை வெளிக்குப் பின்இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தை நாளை நடைபெறவுள்ளது.

**ஹோட்டலுக்குப் பலத்த பாதுகாப்பு**

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கின் மேற்குப் பகுதியில் இருந்து 30 கிலோமீற்றர் தொலைவில உள்ள ''நாகோன்பத்தோம்'' (NAKORNPATHOM) நகரில் உள்ள ''றோஸ் கார்டன்ரிசோர்ட்'' (ROSEGARDEN RESORT) ஹோட்டலில் இப் பேச்சு வார்த்தை நடை பெறவுள்ளது. இதனையடுத்து இந்த ஹோட்டலுக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்

(10ம் பக்கம் பார்க்க)







# யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த மாநாட்டில் ஆக்கபூர்வமான முடிவுகள் எட்டப்படவில்லை

## மக்களின் கோரிக்கைகள் படையினரால் தட்டிக்கழிப்பு

(தென்மராட்சி)

யாழ்.மாவட்டத்தில்,காரைநகர் மீன வர்களுக்கான ''பாஸ்'' நடைமுறை நீக்கல், நாகர் கோவில் மீள்குடியமர்வு, வீமன்காமம் மகா வித்தியாலயத்தை மீள ஆரம்பித்தல் போன்ற விடயங்கள் பற்றி நேற்றைய தினம் யாழ்.அரச செயலகத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவின் பணிப்பின் பேரில் கூட்டப்பட்ட உயர் மட்ட மாநாடு எவ்வித மான ஆக்கபூர்வமான முடி வுகளும் எடுக்கப்படாத நிலையில் முடிவுற்றது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வுயர் மட்ட மாநாட்டில், தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஜீ.ஜீ.கஜேந்திரகுமார், வடபகுதிக்கான இராணுவ பிரதிக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல்.பொ.இரத்தினசபாபதி வட

(10ம் பக்கம் பார்க்க)

## அரசியல் துறையினர் எச்சரிக்கை

(வடமராட்சி)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பொது மக்கள் கூடும் இடங்களில் இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் வெடி கொழுத்திப் போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு, தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சு வெற்றிபெற தேசிய அரசு அமைவது அவசியம

## அமைச்சர் அதாவுல்ல கருத்து

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் பெற்று வரும் சமாதானப் பேச்சு வார்த்தை வெற்றி பெறுவதற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் நிச்சயமாகத் தேவைப்படும். இதனை அரசு பெறுமா? என்பது சந்தேகத்திற்கிடமானது. இந்நிலையில் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவதே சிறந்ததாக இருக்கமுடியும் என்று

(10ம்பக்கம் பார்க்க)

# வலி வடக்கில் மீளக்குடியமர்த்தக் கோரி இன்று மாபெரும் எழுச்சிப் பேரணி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி, இன்று மாபெரும் எழுச்சிப் பேரணி இடம் பெறவுள்ளது.

வலி வடக்கு, வலி தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம் பெறும் இவ் எழுச்சிப் பேரணி, முற்பகல் 10மணிக்கு மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலய முன்றலில் ஆரம்பமாகி, தெல்லிப் பழை பிரதேச செயலகத்தை சென்றடையவுள்ளது.

தமது சொந்த இடங்களில் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரியும், அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியும் தெல்லிப்பழை பிரதேச செயலர், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர், யாழ் அரச அதிபா, மற்றும் மனித உரிமை ஆணைக்குழு த் தலைவர் ஆகியோருக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர்களையும் கையளிக்கவுள்ளது.

அத்துடன் பிரதேச செயலகத்துக்கு முன்பாக பொதுக்கூட்ட மொனறும் நடைபெறவுள்ளது.

இவ் எழுச்சிப் பேரணியில் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், கூட்டுறவுத்துறை ஊழியர்கள்,

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நல்லூர் பிரதேச சபை
## 2003-ம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும்சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டிபாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றை 2003 ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2003–ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கு கேள்விகள் 26.11 2002 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 00 மணி வரை நல்லூர் பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2-00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் இருபிரதிகளை தலைவர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 14 11 2002 ம் திகதி நண்பகல் 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள்தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில்சந்தை, திருநெல்வேலி துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்புநிலையம் என்பனவற்றிற்கு விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா.1,500,000-00 ற்கும் ரூபா.200,000-00ற்கும் ரூபா 200,000-00ற்குக்குறையாதுவைப்பில் உள்ளதற்கான ஆதாரங்களைச்சமர்ப்பித்தல் வேண்டும். எந்தஒருகேள்வியையும்காரணம் காட்டாதுஏற்கவோ அல்லதுநிராகரிக்கவோ தலைவருக்குப் பூரணஅதிகாரமுண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்விகோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3பகுதியை 29.11.2002ம் திகதிக்கு முன்னர் செலுத்திசபையுடன் ஒப்பந்தம்ஒன்றினைச் செய்துகொள்ள வேண்டும்.

குறிப்பு;-

1. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல1, 11 கொக்குவில் உப அலுவலக இறைச்சிக்கடைகள் ஆகியவற்றின் மூன்றுமாத வாடகை ஒப்பந்தம்செய்யப்படும் தினத்தில் செலுத்தப்பட வேண்டும்.

2. சந்தைகளைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும்பொருட்களின் பெறுமதியின் 3%ற்கு மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.

3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா.1.00ற்கும் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 2.00ற்கும் மேல் பாதுகாப்புக்கட்டணம் அறவிடக்கூடாது.

4. தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகைக்குப் புறம்பாக தொகையின் 20% வற்வரியாகக் செலுத்தப்படல் வேண்டும் மேற்படி தொகையும் விண்ணப்பப் படிவத்தில் காட்டப்படுதல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரத் தொகையுடன் அதற்குரிய 20%வற் வரிசெலுத்தப்படுதல் வேண்டும்.

6 இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப் படிவம்பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத்தை நிருபிக்கும் கடிதமும் முன்பு கடைநடத்திய பிரதேசசபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லைஎன உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

| சந்தைகள் இறைச்சிக்கடைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| **நல்லூர் உபஅலுவலகம்** | | | |
| 1. திருநெல்வேலிச் சந்தை | 500.00 | 10,000.00 | 3,992,725.00 |
| 2 திருநெல்வேலித் துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம் | 500 00 | 5,000.00 | 310,296.00 |
| 3. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல I | 350.00 | 5,000.00 | 79,800.00 |
| 4. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல II | 350.00 | 5,000.00 | 51,450.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1 கொக்குவில் சந்தை | 500.00 | 5,000.00 | 165,009.00 |
| 2 கொக்குவில் சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 350.00 | 5,000.00 | 29,999.00 |
| 3 கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | 120,000.00 |
| 4. கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 350.00 | 5,000.00 | 49,775.00 |
| 5. கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,900.00 | 350,000.00 |
| 6. பலாலி வீதி ஆட்டிறைச்சிக்கடை | 350.00 | 5,000.00 | 100,000 00 |
| 7. கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 350.00 | 5,000.00 | 50,000.00 |
| 8. மஞ்சத்தடி மாட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | 126,525.00 |
| 9 கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச் சந்தையும் மாட்டிறைச்சிக் கடையும் | 350.00 | 5,000.00 | 50,000.00 |
| 10 கோண்டாவில் வடக்கு அரசடி வீதி மீன் சந்தை | 100.00 | 500.00 | 1,061.00 |

கோண்டாவில் பலாலிவீதி, ஆட்டிறைச்சிக்கடை மஞ்சத்தடி மாட்டிறைச்சிகடை அரசடி வீதி மீன்சந்தை ஆகியவற்றிற்கு விண்ணப்பப் படிவம் கோருபவர்கள் அதற்குரிய இடத்தை தெரிவுசெய்து காணிஉரிமையாளரின் சம்மதக்கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**க. மணிபல்லவராஜன்** (ஜே.பி.யு.எம)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி.
28.10 2002

(கி-5191)

## இளைஞனுக்கு கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)

ஈ.எஸ்.பி நிறுவனத்தின் யாழ்ஸ்ரான்லி வீதிகளஞ்சிய அறையில் கடமையில் இருந்த இளைஞன் நேற்றிரவு இனந்தெரியாதோரால் கத்தியால் குத்தப்பட்டார்.

நேற்றிரவு 8.30மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் எஸ்.தயாபரன் என்பவரே கத்தியால் குத்தப்பட்டவராவர்.

இவர் யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ)

## நவீல்ட்அதிபர் அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன்இழந்தோர் பாடசாலையின் கட்டிடப் புனரமைப்புப் பணிக்காகவோ அல்லதுவேறு தேவைக்காகவோ நிதி சேகரிப்பதற்கு தனிநபர் எவருக்கும் தாம் அனுமதி வழங்கவில்லை என்று பாடசாலை அதிபர் த.சாம்சன் லூர்திஸ் தெரிவித்துள்ளார்.

(இ-5)

## பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து வன்னி மாவட்டத்தில் இயங்கி தற்போது யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைக்கப் பட்ட பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி பி. ப. 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கனகசபாபதி அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், அளவெட்டி, மல்லாகம், தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, வேலணை, காரைநகர், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி ஆகிய கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## கொள்வனவு சிட்டைகள் அனுப்பவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் விற்பனைக்காகக் கொள்வனவு செய்யும் சகல பொருட்களின் கொள்வனவுச் சிட்டைகளை உரியபடிவங்களுடன் வாரந்தோறும் யாழ் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாரத்துக்குரிய கொள்வனவுச் சிட்டைகளை ஒவ்வொரு திங்கட்கிழமையும் கூட்டுறவுத்திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதன் மூலம் கொள்வனவுக்குரிய பொருட்களின் விலை வேறுபாடுகள் திணைக்களத்தில்பங்கீகரணம் செய்யப்பட்டு விலைகள் பரிசீலிக்கப்படவுள்ளது.

இவ்வாரம்முதல் ஆரம்பமாகவுள்ள இந்தநடவடிக்கையின் மூலம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அனாவசியமற்ற பொருட்கொள்வனவுகள் கட்டுப்படுத்தப்படுவதுவதுடன் பாவனையாளர்களுக்கு தரமான பொருட்களை நியாய விலைக்குவழங்கப்படுவதை இந்நடைமுறை உறுதிசெய்யுமென திணைக்களவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(வ)

# பொ. ஐ. முன்னணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் சமாதான வழிமுறைகளுக்கு பெரும் பாதிப்பு

## எச்சரிக்கும் தொனியில் ஆய்வாளர் குமார் ரூபசிங்க

(கொழும்பு)

சமாதான செயற்பாடுகள் வெற்றி பெற வேண்டுமாயின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆட்சியில் இருக்க வேண்டும் இந்த அரசாங்கமே விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வை வளர்த்துக் கொண்டிருக்கிறது.

இன முரண்பாடுகள் தொடர்பான ஆய்வாளரும், இன்ரநாஷனல் அலேட்-மனிதவுரிமை நிறுவனத்தின் முன்னை நாள் செயலாளர் நாயகமுமான குமார் ரூபசிங்க இவ்வாறு இலங்கை முஸ்லிம் கவுன்சில் நடத்திய மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்;

சிஹல உறுமய, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளுடன் உறவு பூண்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்குவருவது நாடு மீண்டும் சண்டைக்கு போவதை உறுதிப்படுத்துவதாகும்.

விடுதலைப் புலிகளுடன் முஸ்லிம் தலைவர்கள் வைத்துக் கொண்ட கடிதப் போக்குவரத்துக்கள் அந்தந்த அமைப்புகளின் உறுப்பினர்களும் பார்ப்பதற்கு வகை செய்யப்படவேண்டும்.

தலைவர்கள் இவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் தலைமை தோற்றுவிட நேரிடும் என்று குறிப்பிட்டார்.

இக் கருத்தரங்கில், தேசிய முஸ்லிம் இயக்கத்தின் தலைவர் எச்.எம். மஹரூப் பேசுகையில்; அமைக்கப்பட விருக்கும் கூட்டு செயலணிக் குழுவில் தமிழர்களும் முஸ்லிமகளும் சம எண்ணிக்கையான அளவில் நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இது தொடர்பாக இலங்கை முஸ்லிம் கவுன்சில் ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் பேச்சுக்கள் நடத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். (உ)

# உடுவில் கோட்டத்தில் இடம்பெற்ற சைவத் திருமுறை விழாப்போட்டிமுடிவு

(யாழ்ப்பாணம்)

சைவத் திருமுறை விழாவையொட்டி உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட நீதிச் செய்யுள் மனனம், திருமுறை, பண்ணிசை, தொண்டுபடும் செயன்முறை கதாப்பிரசங்கம், புராண படனம் ஆகிய போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன:

ஆண்கள், பெண்களுக்கு தனித் தனியே தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் நடத்தப்பட்ட இப்போட்டிகளில் முதல் பரிசு பெற்ற ஆண், பெண்களின் பெயர்கள் வருமாறு,

### நீதிச் செய்யுள் மனனம்

தரம் 1

டெறோப் மேலின்- சுன்னாகம் றோ; த. க; பாடசாலை, செ. பிரியங்கா-உடுவில் அ;மி த.க. பாடசாலை;

தரம் 2

த. செந்தாளன் - உடுவில் நாகேஸ்வரி வித்தியாலயம், க. அபிராமி-ஏழாலை புனித இசாதோர் பாடசாலை;

தரம் 3

ப. விகிர்தனன்-சுன்னாகம் றோ.த க. பாடசாலை, ச. சத்திய தர்சினி- கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்;

தரம் 4

அ. அனோஜன்-சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், யோ. நிருஜா-ஏழாலைதெற்கு அ;மி;த.க; பாடசாலை;

தரம்-5

பா.சேகரன்-இணுவில் மத்திய கல்லூரி, தே.சரண்ஜா, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்

தரம்-6

க. கஜிதன்-உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், ச; சந்திராயினி ஸ்கந்தவரோதயாக்கல்லூரி

தரம்-7

மு. கஜிதன்-ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், க; சோபனா-ஏழாலை சைவ மகாஜனா

தரம்-8

க; மகிந்தன்- ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் து. துவாரகா-கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்

தரம்-9

அ. திலீபன்-இணுவில் இந்துக்கல்லூரி இணுவில், ஆ. சோபனா- உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்உடுவில்

தரம்-10

த. பிரதீப்- கந்தரோடை தமிழ்சந்தையா வித்தியாலயம், செ. திலக்சி-உடுவில் மகளிர்கல்லூரி

தரம்-11

சி. விக்னேஸ்-ஏழாலை சைவ மகாஜனா, பு. மயூரி குப்பிளான் விக்னேஸ்வரா

தரம்-12

யோ; நீக்கலஸ் - ஸ்கந்தவரோதயா கல்லூரி, கு.ஜெயந்தினி-ஸ்கந்தவரோதயா கல்லூரி

தரம்-13

ச.நிருபன்-இணுவில் இந்துக் கல்லூரி, ம.மாதங்கி-ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

### திருமுறைமனனம் பண்ணிசை

தரம்-1

பா.தினேஷ்-சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாலயம், அ.சுயதினா உடுவில் அ.மி.த.க.பாடசாலை

தரம்-2

அ.சண்முகப்பிரியன்- இணுவில் மத்திய கல்லூரி, க.கஸ்தூரி-அ;மி;த;க. பாடசாலை

தரம்-3

அ. ஐங்கரரூபன்- தாவடி இந்து த;க.பாடசாலை, இ.திவ்ஜா-ஏழாலை சைவ மகாஜனா

தரம் 4

த; டினேஸ்குமார், சுன்னாகம்நாகேஸ்வரிவித்தியாலயம், ஜெ; தேவரூபி இராமநாதன் கல்லூரி

தரம் 5

சு. தசாங்கன் - ஏழாலை மகாவித்தியாலயம், ஜெ. பாரதி- மயிலணிசைவ மகாவித்தியாலயம்

தரம் 6

க;விஷ்ணு- ஸ்கந்தவரோதயாக்கல்லூரி, ந.சுயானி-ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

தரம் 7

அ; அமிர்த சிந்துஜன்-இணுவில் மத்திய கல்லூரி, வி.சுதாயினி- இணுவில் மத்திய கல்லூரி

தரம் 8

க; நிசாந்தன்-மயிலணிசைவ மகாவித்தியாலயம், ப ஜீவதாரணி- ஏழாலை மகாவித்தியாலயம்

தரம்- 9

யோ; சுகந்தன்மயிலணி சைவமகா வித்தியாலயம், துஷ்யந்தினி இராமநாதன் கல்லூரி;

தரம்- 10

பா; கஜன் ஸ்கந்தவரோதயா கல்லூரி, சி; திவ்ஜா ஸ்கந்தவரோதயா கல்லூரி.

தரம்- 11

சு. கபிலன் ஸ்கந்தவரோதயா கல்லூரி, ஜெ. ஜெயப்பிரியாஇராமநாதன் கல்லூரி;

தரம்- 12

ஜே; ஜோசப்மேரி இணுவில் இந்துக்கல்லூரி, சி; பிருந்தா ஸ்கந்தவரோதயா கல்லூரி.

தரம்-13

ச.நிருபன்-இணுவில் இந்துக் கல்லூரி, சு; கிருபாஞ்சலி, ஏழாலை மகாவித்தியாலயம்;

### தொண்டுபடும்செயன்முறை

தரம்-3

லோ.மோகன்ராஜ்-ஏழாலை அ.மி த க. பாடசாலை, ப.நிதர்சனா-புனிதஇசுதோர் வித்தியாலயம்,

தரம்-4

ச.அருண்- இணுவில் மத்திய கல்லூரி, த.யோகிதா- ஏழாலை தெற்கு அ.மி.த.க பாடசாலை,

தரம்-5

இ நிபுலானந்தன் ஏழாலை சைவ மகாஜனா, தே.சரண்ஜா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்,

தரம்- 6

செ.ஜேசிந்தன்- உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், க.கஜந்தினி- இணுவில் மத்திய கல்லூரி.

தரம்- 7

சி.தயாபரன்- மயிலணி சைவ மகா வித்தியாலயம், வி. ஐலயா- இராமநாதன் கல்லூரி.

தரம்-8

பொ. பாஸ்கரன்- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, ஜெ. அமிலா- இராமநாதன் கல்லூரி;

தரம்- 9

வி, கலைச் செல்வன்- உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், ச.சர்மிளா- தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை,

தரம்- 10

ஜெ. சுதர்சள் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம், க. மைதிலி கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்

தரம்- 11

செ. சுதர்சன் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம், மெ; லலிதா கந்தரோடை தமிழ் கந்தையாவித்தியாலயம்

தரம்- 12

பா. சுரேஷ் கண்ணா-இணுவில் மத்திய கல்லூரி, பா. ஜெனா - ஏழாலை மகா வித்தியாலயம்.

தரம் - 13

சோ. கோகிலன் - இணுவில் மத்திய கல்லூரி, இ.மயூரவதனி - இராமநாதன் கல்லூரி,

கதாப்பிரசங்கம்

யேம்ஸ். ஜோசெப் மேரி- இணுவில் மத்திய கல்லூரி, இ. கோகிலா- இராமநாதன் கல்லூரி

புராணபடனம்

ச; நிருபன், வி. கேசவன் இணுவில் இந்துக்கல்லூரி, ம. நிசாந்தினி, அ; துளசிகா ஏழாலை சைவ மகாஜனா

## மீளாய்வுக் கூட்டம்

(காரைநகர்)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ள சமுர்த்திச் சிறு குழுக்கள் மற்றும் சிறு குழு சேமிப்பு தொடர்பான செப்ரெம்பர் மாத முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நாளை காலை 9.00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. (உ-246)

## இராசி பலன்

30- 10- 2002
(ஐப்பசி 13, புதன்)
நவமி பி. ப 4. 13வரை
ஆயிலியம் பி. ப 3. 04வரை
இராகுகாலம்- 12. 03- 1. 33
நல்ல நேரம். 4. 33- 6. 03

**மேடம்**

மாணவர் கல்வியில்ஆர்வம், ரோக பயம், அற்பர் நேசம், மனச்சஞ்சலம்.

**இடபம்**

கூட்டுமுயற்சி, பொருள் சேர்க்கை, வாக்கு மேன்மை, இனிய அனுபவம்

**மிதுனம்**

மாதர் நட்பு, உடல்நலக் குறைவு, பிரயாணக் கஷ்டம், முயற்சி கைகூடும்.

**கடகம்**

பெரியோர் சந்திப்பு, போசனசுகம், இலட்சுமிகரம், தொழில் சிறப்பு

**சிங்கம்**

பிதா சிந்தை, சுபகாரியச் செலவு, அதிகாரிகள் உதவி, சயனசுகக் குறைவு

**கன்னி**

நினைத்த காரியம் கைகூடும் பொருள் சேர்க்கை, சென்ற இடத்தில்செல்வாக்கு, குடும்ப மகிழ்ச்சி

**துலாம்**

தூரதேசச் செய்தி, உற்சாகம், செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**

தொழில்நிலை மாற்றம், புதிய திட்டமிடல், வீண் பயம், முயற்சி கைகூடும்.

**தனுசு**

மனக்கிலேசம், தேவையற்ற பிரச்சினை, காரிய தடங்கல், வாகன பயம்

**மகரம்**

நண்பர்கள் சந்திப்பு, கௌரவமான நிலை, காரிய அனுகூலம், தனவரவு

**கும்பம்**

நோய்குணமடைதல், காரிய சித்தி, இனிய சம்பவம், பண வரவு

**மீனம்**

புத்திரரால் கவலை, உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம், தர்மம்

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது)

வளவன்

## பாராட்டும் பரிசு வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் இவ்வாண்டு 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி பரிசில் வழங்கும் வைபவமும், தளபாடம் வழங்கும் வைபவமும் இன்று காலை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் ச. யோகராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவிற்கு ரி. இராசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். இந்து மகாவித்தியாலய அதிபர் செல்வி பா. மார்க்கண்டு உட்பட பலர் கலந்து கொள்கிறார்கள். (வ)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் நடத்தி வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில், எதிர்வரும் முதலாம் திகதி இந்துசமய விவகார அலுவல்கள அமைச்சு உதவிப் பணிப்பாளர் சிவ. மகாலிங்கம் தலைமையில், 'பெரும்பெயர் முருகன்' என்னும் விடயம் பற்றி யாழ். மாவட்டச் செயலக விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி மாவை செ. நவரத்தினம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ)

## நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யா/இளையதம்பி இந்து மகா வித்தியாலய நூற்றாண்டு விழா இன்று காலை 9.30மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு. செல்லையா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் செ. பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான ப. கணேசலிங்கம், நல்லூர் பிரதேச செயலர் நா.வேதநாயகன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக முன்னாள் உதவி விவசாயப்பணிப்பாளர் செ.லிங்கநாதபிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## சாரதியை நீதிமன்றில் ஆஜர் செய்ய பணிப்பு

(மந்திகை)

வீதியால் சென்றுகொண்டிருந்த முதியவரை மோதி பலி கொண்ட வாகனத்தையும் அதன் சாரதியையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு மேற்படி மரண விசாரணையை நடத்திய மரண விசாரணை அதிகாரி தங்கராஜா பொலிஸாருக்குப் பணித்துள்ளார்.

கடந்த சனியன்று புலோலி தெற்கு கப்பாவத்தையைச் சேர்ந்த பெ. மாணிக்கம் (வயது 70) என்பவர் ஆனைவிழுந்தான் மயானத்திற்கு சென்றுவிட்டு வரும் வழியில் இறந்து கிடக்கக்காணப்பட்டமையும்,

மறுநாள் இந்தப் பிரேதப் பரிசோதனையை மேற்கொண்ட மாவட்ட வைத்திய அதிகாரி சி. கதிரவேற்பிள்ளை பாரமான வாகனம் வயிற்றில் ஏறியதால் ஏற்பட்ட மரணம் என தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-23)

# அமெரிக்க இராஜ தந்திரி ஜோர்தானில் சுட்டுக் கொலை

(வாஷிங்டன்)
அமெரிக்க இராஜதந்திரியான லோறன்ஸ்போலே ஜோர்டான் தலைநகரான அம்மானில வைத்து இனந்தெரியாத துப்பாக்கிதாரியி னால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கிழக்கு அம்மானிலுள்ள அமெரி க்காவின் சர்வதேச அபிவிருத் திக்கான முகவர் நிலையத்தில் பணியாற்றி வந்த இவர் தனது வீட்டில் இருந்து காலை உடற் பயிற்சிக்காக வெளியேறிய சமயமே வீட்டிற்கு முன்பாக வைத் துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இக் கொலை தொடர்பான புலன் விசாரணைகளை மேற் கொண்டு வரும் ஜோர்தான் இது குறித்த தகவல்களை வெளி யிடுவதில் பின்னடித்து வருவ தாக தெரிவிக்கப்படுகிறது. தவிர வெளிநாட்டுத் தூதரகங்களிற் கான பாதுகாப்பைப் ஜோர்தான் பலப்படுத்தி வருகின்றதென அந் நாட்டின் தகவல் அமைச்சர் மொஹமட் அட்வான் தெரிவித் துள்ளார்.

மேலை நாட்டு ராஜதந்திரி ஒருவர் ஜோர்தானில் வைத்துக் கொலை செய்யப்பட்டது இதுவே முதல் தடவை என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

(சு-2)

## இராஜ தந்திர உறவுகளைப்புதுப்பிக்கும் ஜப்பான்- வட கொரிய பேச்சுக்கள் ஆரம்பம்

(டோக்கியோ)
ஜப்பானும் வட கொரியாவும் தமக்கிடையேயான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள் ளும் வகையில நேற்று மீண்டும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித துள்ளன.

கொரிய யுத்தத்தின் போது வட கொரியாவினால் கடத்தப்பட்ட ஜப்பானியர்கள் மற்றும் வடகொ ரிய அணு வாயுதத திட்டத்தைக் கைவிடுவதற்கான ஒப்பந்தங்கள் குறித்து இப்பேச்சு வார்த்தையில் முக்கியமாகக் கலந்துரையா டப்படும் என ஜப்பான் அதிகா ரிகள் தெரிவித துள்ளனர்.

வட கொரியா அணு ஆயுதத் திட்டத்தை முழு அளவில் கைவிட வேண்டுமென உலக நாடுகள் பலவும் அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் இப்பேச்சு வார்த தைகள் ஆரம் பமாகியுள்ளமை குறிப்பிடததக்கது.

(சு-2,4)

## குஜராத் சட்ட மன்ற தேர்தல் டிசம்பரில்

(புதுடில்லி)
இந்தியாவின் குஜராத் மாநிலச் சட்ட மன்றத் தேர்தல் எதிர்வரும் டிசம்பர் மாதம் 12ஆம் திகதி நடை பெறுமெனத்தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

குஜராத் ஆளும் பாரதிய ஜனதா கட்சி இம் மாதம் தேர்தல நடை பெறுமென அறிவித்திருந்த போதும், இதனை சுதந்திர ஆணைக குழு நிராகரித்து விட்டது.

இதனையடுத்தே எதிர் வரும் டிசம்பரில் தேர்தல் இடம் பெறு மென அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிறேசிலை மேம்படுத்துவதில் புதிய ஜனாதிபதி முனைப்பு

(பிரேசிலியா)
பிரேசிலில் நிலவும் நிதி நெருக்கடியைப் போக்கு வதற்கும் நிலையான பொருளா தார வளர்ச்சியை ஏற்படுத்து வதற்கும் அந் நாட்டின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்ய பட்டுள்ள லூயி இனோசியா லூலாடி சில்வா உறுதி பூண்டுள் ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 61 வீத வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியீட்டிய லூலாடி சில்வா, அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தனது பதவியை ஏற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், வறுமையில் வாடும் 50 மில்லியன் பிரேசில் மக்களின் பட்டினிச் சாவைக் குறைப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் தமது நாட்டுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஆஸி. முஸ்லிம்கள் மீது அடிக்கடி தாக்குதல

### இனம் தெரியாதோர் கைவரிசை

(கன்பெரா)
அவுஸ்திரேலியாவிலுள்ள முஸ்லிம்கள் மீது இனந் தெரியாத நபர்களால் பரவலாகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக அவுஸ்திரேலியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தோனேஷிய பாலித்தீவில் இம்மாதம் 12 ஆம் திகதி இடம் பெற்ற குண்டுத்தாக்குதல்களின் எதிரொலியாகவே அவுஸ்திரேலியாவில் வாழும் முஸ்லிம் மக்கள் மீது பரவலாகத் தாக்கு தல்கள் இடம் பெற்று வருகின்ற தெனவும், பெரும்பாலும் பாட சாலை செல்லும் மாணவர்கள் மற்றும் தொழுகைக்கு செல்லும் ஆண்கள் மீதே, இத்தாக்குதல் கள் இடம் பெற்று வருகின தாகவும் தெரிவிக்கப்படுறது. (சு2)

## இந்தோனேஷிய ஜனாதிபதி பாலித்தீவிற்கு திடீர் விஜயம்

(ஜகார்த்தா)
இந்தோனேஷிய ஜனாதிபதி மேகவதி சுகர்ணோ புத்திரி நேற று பாலித்தீவிற்கு திடீர் விஜய மொன்றை மேற்கொண்டுள்ளார்.

பாலித்தீவில் இடம் பெற்ற நூற்றுக்கணக்கானோரைப் பலி கொண்ட குண்டுத் தாக்குதல் குறித்து உரிய நட வடிக்கையை எடுக்கத் தவறி விட்டார் என்ற குற்றச்சாட்டுக்கள் இவர் மீது பல தரப்பில் இருந்தும் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இப் பயணம் அமை வது குறிப்பிடத்தக்கது. (சு-4)

## தமிழகத்தில் கடும் மழை 7 பேர் பலியாகினர்

(புதுடில்லி)
தமிழகம் முழுவதும் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரண மாக 7 பேர் உயிரிழந்துள்ள னர்.மழைகாரணமாக வீடுகள் பல இடிந்து விழுந்துள்ளதுடன், மண் சரிவும் ஏற்பட்டுள்ளது.

இதனால் மின்சார விநியோ கம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் ஆறுகளின் நீர்மட்டம் உயர்ந் துள்ளதெனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (சு-2)

## பணய நாடகத்தில் பலியானோரின் இறுதிக் கிரியைகளுக்கு ரஷ்ய அரசு ஆயத்தம்

(மொஸ்கோ)
மொஸ்கோ கலையரங்கில் செச்சினியத் தீவிரவாதிகள் நடத் திய பணய நாடகத்தை முறிய டிக்கும் நோக்கில் ரஷ்ய விசேட படையினர் நடத்திய அதிரடித் தாக்குதலில் பலியான பொதுமக் களின் இறுதிக் கிரியைகளுக் கான ஆயத்தங்களை ரஷ்ய அரசு மேற்கொண்டு வருகின்றது.

இந்தச் சம்பவத்தில் தீவிரவா திகளால் பணயம்வைக்கப்பட்டி ருந்த 100ற்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப் பட்டமை தெரிந்ததே. (சு2)

# யாழ்ப்பாணத்தை மயான பூமியாக்கிய 95ம் ஆண்டு இடப் பெயர்வு - ஓர் மீள் பார்வை

**ஈழத்தமிழரது தேசிய வரலாற்றில் 1995 ஒக்டோபர் 30இல் பெரும் துயர நிகழ்வு ஆரம்பமானது. அந்நிகழ்வுகளை வணபிதா கலாநிதி எட்வின் சவுந்தர நாயகம் எழுதிய ''அந்த இருள்படிந்த நாட்கள'' (A War Diary From Jaffna) என்ற நூலில் இருந்து நினைவுகள் மீட்கப்படு கின்றன.**

**ஆ-ர்**

அன்று ஒக்டோபர் மாதம் முப் பதாம் திகதி. நேரமோ மாலை. யாழ் மறைமாவட்டக் குருக்க ளும், துறவியர்களும், பொதுநிலை யினரும் ஆயருடன் ஆயர் இல் லத்தில் கூடினர். வலிகாமம் பகு தியிலிருந்து சூரியக்கதிர் என்ற புனைப் பெயருடன் நடாத்தப் பட்ட இராணுவ நடவடிக்கைக ளுக்குப் பயந்து, இடம் பெயர்ந்து ஓடி வரும் மக்களுக்கு என்ன செய்வது என்று ஆலோசிப்பதற் காகக் கூடினார்கள்.

கூட்டத்தில் இருந்தோருக்கு இன்னும் ஓரிரு மணி நேரத்தில் என்ன நடக்கும் என்று முற்றா கத் தெரியவில்லை. மறைமாவட்ட பொறுப்பாளர்கள், பயந்து ஓடிவரும மக்களுக்கு ஏற்ற பணி புரியத் தக்கதாக ஓரிரு இடமாற்றங் களைச் செய்துகொண்டனர். யாழ்நகரின் கலங்கிய நிலை யைப் பற்றி கொழும்பில் எடுத் துரைக்கும்படி ஆயரிடம் விடப் பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட் டது. நான் சொன்னால் கேட் பார்களா? என்ற ஏக்கத்துடன் கொழும்பு செல்ல ஆயர் மறுக் கின்றார்.

கூட்டம் முடிகின்றது. யாழ் பெருந் தெருக்களில் ஒலிபெருக் கிகள் அலறத் தொடங்குகின் றன. அன்பான தமிழீழ மக்களே! சிறீலங்கா இராணுவம் மும்மு னைகளிலிருந்து யாழ் நகரை நோக்கி நகர்ந்து கொண்டிருக் கிறது. கோப்பாய், சண்டிலிப் பாய், உரும்பிராய் போன்ற இடங்களை இராணுவம் அண்மித்து விட்டது. எனவே உங்களுடைய பாதுகாப்புக் கருதி தென்மாராட்சி, வடமாராட்சிப் பகுதிகளுக்கு செல்லுங்கள் இந்த அறிவித்தல் யாழ்நகருக்குப் பெரிய பயத்தை யும் கலக்கத்தையும் உண்டு பண்ணியது.

இரவுணவு முடிந்ததும் கல் லூரியை விட்டுப் போகத் தயா ராகுங்கள் என்ற அறிவித்தல் யாழ் குருத்துவக் கல்லூரி அதி பரிடமிருந்து வருகின்றது. இந்த அறிவித்தலைக் கேட்ட கல்லூரி மாணவர்கள் அங்குமிங்குமாக ஓடி கல்லூரியை எவ்வளவு விரை வில் விட்டகல முடியுமோ அவ்வ ளவு விரைவாக விட்டலக ஏற்பா டுகள் செய்கிறார்கள். கல்லூரி யும் கலையத் தொடங்குகின் றது.

இரவு வேளை, மழை பெய்கின றது. நல்ல போக்கு வரத்து வசதி கள் இல்லை. மிதிவண்டிப்பய ணம். இராணுவம் விடிவதற்குள் யாழ்நகரையோ கொழும்புத்து றையையோ அடையப் போவ தில்லை. இவை போன்ற காரணங் களைக் காட்டி கல்லூரி மாண வர்கள் மறுநாள் காலை கல்லூ ரியை விட்டகலலாம் என்ற யோச னை முன் வைக்கப்பட்டது. அது எதுவித விளைவையும் ஏற்படுத்த வில்லை. காலை இரண்டு மணிக் குள் விடுதலைப் போராளிகள் பாரிய யுத்தம் ஒன்றை நடத்த இருப்பதாகவும், அதன் விளை வாக நாவற்குழிப்பாலம் தகர்க் கப்பட்டு விடும் என்ற தகவலை நம்பகரமான வட்டாரத்தில் இருந்து பெற்றுக் கொண்டதாகக் கூறிய அதிபர் கல்லூரி மாணவர்களை உடனடியாகவே விட்டகலும்படி பணித்தார்.

யாழ்நகரை விட்டு வெளியே றும் படலம் தொடங்கி விட்டது. யாழ் கண்டி பெருந்தெரு மக்கள வெள்ளத்தால் அலை மோதத் தொடங்கியது. கையில் அகப்பட்ட பொருட்களுடன் மக்கள் அல்லோலகல் லோலப்பட்டு, அடித்து முந்திக் கொண்டு நாவற்குழிப் பாலத் தைக் கடந்துவிட வேண்டும்

## அந்த இருள்படிந்த நாட்கள்

என்ற அங்கலாய்ப்போடு ஓடத் தொடங்குகிறார்கள்.பாசத்துடன் வளர்த்த நாய் பூனைகளையும், கோழிகுஞ்சுகளையும், பெட்டி படுக்கைகளையும் தங்களோ எடுத்துக் கொண்டு ஓடுகின்ற அதே வேளையில், சிலர் வயதில் முதிர்ந்த தங்கள் அன்புப் பெற்றார்களை அநாதை களாக்கி விடுகிறார்கள்.

இப்படியாகக் கைவிடப்பட்ட முதியோர் களைச் சேர்த்து எடுத்து கவனிக்கும் பணியில் யாழ மறை மாவட்டம் அக்கறை கர்ட்டுகிறது. சம்பத்திரிசியார் கல்லூரியில் கைவிடப்பட்ட முதியோர்ருக்காக இடம் ஒதுக்கப்பட்டு அவர்க ளைக் கண்காணிக்கும் அன்புப் பணியில் யாழ் கத்தோலிக்க திருச்சபை ஈடுபடுகிறது.

ஒடுங்கிய நாவற்குழிப்பாலம் அகன்றுவிரிந்து சென்ற மக்கள் வெள்ளத்தின் விரைவான வேகத் தை முடங்க வைத்தது. அத்தெ ருவில் 150 யார் தூரத்தைக் கடந்து செல்ல ஏறத்தாள இரண் டு 2மணி நேரம் எடுத்தது.

கொழும்புத்துறைக் குருத்து வக் கல்லூரி தனது மாணவர் களை மட்டும் இழக்கவில்லை. கடமை உணர்வுடன் சேவையாற் றிய சமையல் பணியாளர்களை யும் இழந்து நின்றது. பாடம் கற்றுக் கொடுத்த ஆசிரியர்கள் பசிக்கொடுமையால் தற்காலிக மாகச் சமையல் கலையில் தேர்ச்சி பெறத் தொடங்குகிறார் கள்.

ஒகடோபர் மாத இறுதி நாள். ஓவென்ற இரைச்சலோடு இடை விடாது இரவுமுழுவதும் பெய் கின்ற மழை நிம்மதியாகத் துயில் கொள்ள விடவில்லை. அதுமட் டுமா? மழை வெள்ளத்தில் தப் பாது கழுவப்படும் மக்கள் கூட் டத்தின் நினைவும், அவா களோடு சேர்ந்து நிற்கும் எங்களது கல் லூரி மாணவர்கள் பற்றிய கவலை யும் நினைவலைக ளாக ஒன்றோடு ஒன்று மோதித் துயில் கலைந்த இரவை மேலும் நிம்மதியற்ற தாக்குகின்றது.இரவு முழுவதும் துன்பப்பட்ட மாணவர்கள் சிலர் மறு நாட் காலையில் மீண்டும் கல்லூரி வாசலை வந்தடைகி றார்கள்.

சடுதியாகக் கல்லூரியை விட் டுச் சென்றமையை நினைத்துக் கவலை கொள்கிறார்கள். குருத் துவக் கல்லூரி தனது மாணவர் களை வரவேற்று, சோர்ந்து போன அவர்களின் உடலையும் உள்ளத்தையும் தேற்றியது.

கடந்த சோகமான இரவில் மூன்று பச்சிளங்குழந்தைகள் மக்கள் நெரிசலில் அகப்பட்டு உயிரிழந்த சோகக் கதையைச் சொல்லிக் கண்ணீர் விட்டார் கள். அக்கதையைக் கேட்டோ ரின் கண்களும் கலங்கி நின்றன!

பசி பட்டினியோடு இரவோடு இரவாக ஓடிய மக்கள், குடி தண் ணீர் கூட இல்லாமல் மழைக்குப் பிடித்த குடையிலிருந்து வடிந் தோடிய நீரைப் பருகித் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொண்ட னர்.

### வணபிதா கலாநிதி எட்வின் சவுந்தரநாயகம்

மழை ஒரு பக்கம், ஆவேசத்துடன் முன்னேறும் இராணுவத்தினர் தீட்டும் இடைவிடாத வேட் டுக்களின் காதைப் பிளக்கும் சத்தமும், அவை தருவிக்கும் பயமும் அதிர்ச்சியும் இன்னொரு பக்கம் - பசி பட்டினி - நத்தை வேக நகர்வின் சோர்வு மக்கள் படும் பாடு மறு பக்கம். இவைகளை எடுத்துச் சொல்லச் சொற்கள் எங்கே?

பாதுகாப்புத் தேடி ஓடும் மக் களோடு செல்லும் முதியவர்கள் சிலர் தங்களால் தொடர்ந்து நடக்க முடியாது என்று கூறித் தெருமருங்கில் பிணங்களாயி னர். அப்பிணங்களை நல்மனம் படைத்த சிலர் மறுநாள் அடக் கம் செய்தனர்.

இந்த வாரம் முழுவதும் மாத இறுதிநாளான இன்றும் சோகப்ப டலம் தொடருகிறது. நேற்றய தினத்தில் நடைபெற்ற நிகழ்வு கள் இன்றும் எவ்வித மாற்றமும் இன்றி இன்னும் உத்வேகத்தில் முன்னேறிக்கொண்டிருக்கின்றன,

**வளரும்**

# இன்று ஒரு தகவல்

## படிப்பு மிகவும் முக்கியம்

'அறிவுத் தேவையை விடக் கவனக் குறைவு தான் அதிக கஷ்டத்தை உண்டாக்கி விடுகிறது' என்று ஓர் அறிஞர் சொல்லியிருக்கிறார். அதனால் ஏட்டுப் படிப்பும் வேண்டும் அனுபவப்படிப்பும் வேண்டும். இவை இரண்டும் இருந்தாற்றான் வாழ்க்கைச் சக்கரம் சுலபமாக ஓடும் இன்றைக்குப் படிப்பதற்குத் துணையாகஇருப்பது புத்தகங்கள். பள்ளிக் கூடத்தில் சரியாகப் படிக்கவில்லையென்றால் தலையிலே இருப்பது மூளையா? களிமண்ணா? என்று கேட்பது வழக்கம்.

ஆனால், முதல் புத்தகமே களிமண்ணாகத் தான் இருந்தது என்பதை நினைத்துஆறுதல் அடைந்து கொள்ளலாம். ஆமாம், புத்தகங்கள்முதலில் களிமண் சுவடியாகத் தான் ஆரம்பமானது? எங்கே? மொசப்பதேமியாவில். ! களிமண்ணிலே தான் எழுத்துக்களைப் பதித்தார்கள். அதற்குப் பிறகு தான் கல்லிலே பதித்தார்கள். கட்டையிலே பதித்தார்கள். இப்போது அச்சாக பத்திரிகையிலே பதிக்க ஆரம்பித்து விட்டோம். கடதாசித்தாளில் பதிக்கிறதெல்லாம் நெஞ்சிலே பதிகிறதா? என்பது தான் கேள்வி. அது இருக்கட்டும்.

களிமண்படிவத்திலேபெரிய காப்பியங்களை யெல்லாம் கூடப் பதிவு செய்து வைத்திருந்தார்களாம். காகிதத்தில் எழுதுகிற பழக்கம் எகிப்தில் ஆரம்பமானது. சைப்பிறஸ் பபிறாஸ் என்று ஒருசெடி. அதிலிருந்து பாபிறைஸ் செய்து அதில் எழுதினார்கள் இது வெளிநாடுகளுக்கு கூட ஏற்றுமதி ஆனது.

ஒரு தடவைஎகிப்து மன்னர் இன்னொரு நாட்டு மன்னரிடம் சண்டை போட்டுக் கொண்டு இந்த ஏற்று மதியை நிறுத்தி விட்டார். உடனே அந்த நாட்டு மன்னர்யோசித்தார். தோலில் எழுத ஆரம்பித்து விட்டார். கால் நடைகளின் தோல் இதற்கு உபயோகப்பட்டது.

இப்பொழுதுநாம் வலதுபக்கத்தில் ஆரம்பித்து இடது பக்கமாகப் படித்துக்கொண்டு போகிறோமல்லவா? 14வது நூற்றாண்டில் கிரேக்கர்கள் தான் இதற்கு வழிகாட்டினவர்கள். 15ம் நூற்றாண்டில் ஜேர்மனியர் ஒருவர்தான்அச்சடிக்கிற முறையைக் கண்டு பிடித்தார். இன்றைக்குநிறையப் புத்தகங்களை அச்சடித்துத் தள்ளிக் கொண்டிருக்கிறோம். அதைப் படிக்கிறார்களா, இல்லையா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் அச்சடித்துத் தள்ளிக் கொண்டிருக்கிறோம்.

பேகன் (Bacon) என்ன சொல்கிறார் தெரியுமா? சில புத்தகத்தைச் சுவைக்க வேண்டுமாம். சிலவற்றை விழுங்கி விட வேண்டுமாம். சில புத்தகங்களைச் ஜீரணிக்க வேண்டுமாம். இப்படி அவர் சொன்னால் அதை அப்படி அர்த்தம் பண்ணிக் கொண்டு 'ருசி' பார்க்க ஆரம்பித்து விடக் கூடாது. அவர்புத்தகம்என்று சொன்னால், அதில் சொல்லியிருக்கிற கருத்தைச் சுவைக்க வேண்டும் என்று அர்த்தம்.

படிப்பது என்பது வேறு; கற்பது என்பது வேறு! படிக்க வேண்டியன சில இருக்கின்றன. பார்க்க வேண்டியனசில இருக்கின்றன. கற்கவேண்டிய சில இருக்கின்றன திருக்குறளைக் கற்றேன்என்றுசொல்ல வேண்டும். திருக்குறளைப் பார்த்தேன் என்று சொல்லக் கூடாது.

ஏதோ புரட்டிப்பார்த்து விட்டுத்தூக்கிப்போட்டு விட்டேன் என்று ஆகிவிடும்.

" நியூஸ்பேப்பர் வாங்குகிறோம். என்னசொல்கிறோம்? பேப்பர் பார்த்தேன். அதில் இப்படிப்போட்டிருக்கிறது என்றுசொல்கிறோம். இன்யை பேப்பர் வாங்கிக் காலையிலிருந்து கற்றுக்கொண்டிருக்கிறேன் என்றா சொல்வது?

ஒரு நூறு-இருநூறுவருடங்களுக்கு முன்னர் கூடயாராவது செத்துப்போனால் அவர்கள் பின்னரும் படிப்பார்கள் என்கின்ற நம்பிக்கையில் சில புத்தகங்களையும் சேர்த்து வைத்துப் புதைக்கிற வழக்கம் சில நாடுகளில் இருந்தது. நமதுஊரிலும் சிலர்செத்தால் புத்தகம் வைத்துப் புதைக்கலாம் என்று தோன்றுகிறது. இருந்தவரையும் தான் எதையும்படிக்கவில்லை இனிமேலாவதுபடி என்று சொல்கிற மாதிரி.

இவ்வளவு தகவலும் எதற்காக வென்றால் படிப்பு மிகவும் முக்கியம் என்பதைச் சொல்வதற்காகத்தான்: படிக்கிற பிள்ளைகளுக்கு ஒரு வார்த்தை. உங்களுக்குப் பரீட்சை நெருங்குகிறது. நன்றாகப்படியுங்கள். நெட்டுருப் போடக்கூடாது. புரிந்து கொண்டுபடித்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பரீட்சை வருகிறதென்றால், சிலர் மற்றவர்களை நம்பி இருப்பதும் உண்டு. அதுமிகவும் தப்பு. ஒருவர் அடுத்தவீட்டுக் காரரிடம் அப்படித்தான் சொன்னார். ''சார்! பரீட்சை வருகிறது. உங்கள் பையனை நன்றாகப்படிக்கச் சொல்லுங்கள்'' என்றார். என்பையன் மீது உங்களுக்கு மிருந்த அக்கறை நன்றிசார்!'' என்றார் அவர். ''அதற்கில்லை சார்! உங்கள் பையனுக்குப்பக்கத்தில் உட்கார்ந்துதான் என் பிள்ளை பரீட்சை எழுதப் போகிறான் அதனால் சொன்னேன்'' என்றார் இவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வடக்கு- கிழக்கில் 42 பாடசாலைகளின் அபிவிருத்திக்குநிதிஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு -கிழகசு மாகாணங்களில் உள்ள 42 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக பாடசாலை கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம். சிறிசேன தெரிவித்துள்ளார்.

'பாடசாலைகளை அபிவிருத்தி செய்து தேசத்தை கட்டியெழுப்புவோம்' என்னும் விசேட வேலைத்திட்டத்தின் கீழே இப்பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்கமைய 11ஏ,பி,தரத்தைச் சேர்ந்த 15 பாடசாலைகளும் சீ தரத்தை சேர்ந்த 26 பாடசாலைகளும், தரம் இரண்டைச் சேர்ந்தஒருபாடசாலையும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்கென 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதியும்ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 1ஏ, பீ வகைப்பாடசாலைகளுக்கு தலா30ஆயிரம்ரூபாவும்ஒன்று சீ வகை பாடசாலைகளுக்கு தலா25 ஆயிரம்ரூபாவும்தரம் இரண்டைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு தலா20ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதாக அவர்மேலும்தெரிவித்துள்ளார். (உ-8)

# ஜனாதிபதியின் நட்புக்கரத்தை அரசாங்கம் இறுகப் பற்றுமா?

## பொ. ஐ. மு. பேச்சாளர் கேட்கிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி நீட்டியிருக்கும் நட்புக்கரத்திற்கு அரசாங்கம் கூறும் பதில் என்ன? எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் ஞாயிறன்று நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் பொ. ஐ. மு. யின் பேச்சாளர் சரத்அமுனுகம இவ்வாறு கேள்வி எழுப்பினார். அங்கு அவர் மேலும் பேசுகையில்;

ஜனாதிபதி தனது உரையில் இன்றைய பொருளாதார நிலைபற்றியும், அரசாங்கமும் புலிகளும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றியும் ஆராய்ந்துள்ளார். நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், தனியார் மயமாக்கல், ஜனநாயகம் என்பவை பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்.

சமாதானப் பேச்சுகளில் ஜனாதிபதியின் பிரதிநிதியொருவர் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டுமென்று விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இதுவரை பதிலளிக்கப்படவில்லை.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்களுக்கு, பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணியும் ஆதரவு வழங்குகிறது. இந்நிலை அரசாங்கத்தின் பல வீனத்தை காட்டுவதாகும்.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி ஆற்றிய உரைக்கு அரசாங்கம் உரிய முறையில் பிரதிபலிப்பை காட்டாது விட்டால் சமூக அமைப்புகள் அரசாங்கத்தை தூண்ட வேண்டும். இது தொடர்பான அபிப்பிராயத்தை உருவாக்குவதில் ஊடகங்களும் பங்காற்ற வேண்டும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ)

## அச்சுவேலி பாடசாலைக்கு அதிபர் நியமனம்

(கோப்பாய்)

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலைக்கு புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பத்தைமேனி இரட்ணேஸ்வரி வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய சி. மகேஸ் வரதாசன் என்பவரே புதிய அதிபராக நியமிக்கப்பட்டவராவார். (உ-79)

## வேலணைப் பாடசாலைக்கு விஜயம்

(கொக்குவில்)

பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க. வேலாயுதம் தலைமையிலான பதுளை நகரசபை, பிரதேசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட 40 பேர் கொண்ட குழு நேற்று முன்தினம் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகாவித்தியாலயத்தைப் பார்வையிட்டது. (உ-243)

## விபத்தில் ஆசிரியர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோவிலடியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள், ஓட்டோ விபத்தில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆசிரியர்கள் இருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அளவெட்டி வடக்கினைச் சேர்ந்த மங்களம் மணிசேகரம் (வயது 38) யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த வேதநாயகம் ஜோன்சன் (வயது 37) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். (த)

## செயலராக நியமனம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சமூக அபிவிருத்திச் செயலாளராக பைசல் முஸ்தபா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பிரித்தானியாவின் இலங்கைத் தூதுவராக பதவி வகித்துவரும் பயஸ் முஸ்தபாவின் மகனாவார். (வ)

## இஸற்புள்ளி முறை 14 மாணவர்கள் எதிர்த்து மனு தாக்கல்

(கொழும்பு)

இஸற்புள்ளி முறைக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் 16 பேர் இதுவரை உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவ் வழக்கில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உட்பட 42 பேர் பிரதி வாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர்களில் 4 பேர் மூன்று பாடங்களிலும் அதி விசேட சித்தி பெற்றுள்ளதோடு, ஏனைய 13 பேரும் இரு அதிவிசேடசித்திகளும் ஒரு விசேட சித்தியும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு மருத்துவ பீடத்தில்கல்விபயில போதிய புள்ளிகள் இருந்தும், இஸற் புள்ளி முறையினால் பற் சிகிச்சை பிரிவிற்கே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தம்மை விட குறைந்த புள்ளிகளுடைய 47 பேர்மருத்துவ பீடத்துக்கு தெரிவாகியுள்ளனர் எனவும் அம் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் மூலம் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், தம்மை மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்குமாறும் அம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## பிரதேச செயலக ரீதியாக டெங்கு ஒழிப்புத் திட்டம்

(சுதுமலை)

டெங்கு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள், யாழ். மாவடத்தில் உள்ள ஒவ்வோர்பிரதேச செயலர் பிரிவு ரீதியாக எதிர் வரும் நவம்பர் மாதம்முதல் தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளன.

தற்போது பெய்து வரும் மழைகாரணமாக டெங்குக் காய்ச்சலைஏற்படுத்தும் எயிடிஸ்இன நுளம்புகள் பெருக்கம் அடைவதற்கான சாத்தியக் கூறுகள் தென்பட்டதைத் தொடர்ந்து சுகாதாரஅமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு இதுகுறித்த சுற்று நிருபத்தினை சகல பிரதேச அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது. (உ-252)

## முஸ்லிம் மக்களுக்கும் புனர்வாழ்வு கொடுப்பனவு அமைச்சர் ஹக்கீம் தகவல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன விகிதாசார அடிப்படையில் புனர்வாழ்வுக் கொடுப்பனவுகள் வழங்கப் படுவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு ஒல்லிக்குளம் மற்றும் கிச்சான் பள்ளக் கிராமமக்களை மீளக்குடியேற்றும்வகையில் வீடுகள் அமைப்பதற்கான காசோலைகளை வழங்கும்நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும்கருத்து தெரிவிக்கையில்;

முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படுவதுபோன்று தமிழ் மக்களின் மீளக்குடியேற்றத்துக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, சமாதான முயற்சிகளை சகலரும் உருக்குலையாமல் பாதுகாத்து கொள்ளவேண்டும்.

அரசபடைகளின் பாதுகாப்பைவிட, ஓர் இனத்துக்கு தாம் சேர்ந்துவாழ்கின்ற சமுகத்தின் பாதுகாப்பே முக்கியம்ஆகும்என்றார்.

சகல இனமக்கள்மனதிலும் சகோதரத்துவம் வளரவேண்டும்எனவும் அமைச்சர் அங்கு வலியுறுத்தியுள்ளார். (உ-8)

## பொ.ஐ.மு மீண்டும் ஆட்சியமைக்கும்

(கொழும்பு)

பொதுத்தேர்தலின் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் பொது ஜனஐக்கிய முன்னணி அரசு மீண்டும் ஆட்சியமைக்கும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபாலா சிறிசேன தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதை கண்டிக்கும் முகமாகவே அத்துருகிரியவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (உ-8)

## மாணவர்களுக்குச் சத்துணவு

உரும்பிராய் இந்துக்கல்லூரியில் பரிகாரக்கற்றல் வகுப்பில் பங்குபற்றும்மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படவுள்ளது.

இக் கல்லூரியில் கனடா கிளையினர். இத் திட்டத்திற்கு உதவி வழங்கவுள்ளதாக கல்லூரி அதிபர் அ. ஈஸ்வரநாதன் தெரிவித்தார். (உ-79)

## முஸ்லிம் எம். பிக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அமைச்சர் ஹக்கீம் பாடுபடுவார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ள ஐந்து கோரிக்கைகளையும் நிறைவேற்றப்பாடுபடப் போவதாக கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காத்தான்குடியில் உலமா சபை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் முஸ்லிம் மக்களைபிரதி நிதித்துவப் படுத்தும் வகையில் அமைச்சர் ராவூப் ஹக்கீம் தாய்லாந்து பேச்சில் கலந்து கொள்ள வேண்டுமெனவும், அதற்கு தேவையான ஆதரவை தாம் பெற்றுக் கொடுப்பதாகவும் மகாசபை உறுப்பினர்களும் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு-கிழக்கு முஸ்லிம் பகுதிகளுக்கு தனியான பாதுகாப்புமையங்களை அமைத்தல்இணைந்தவடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்துவதனால் முஸ்லிம் மக்களுக்கு தனியான நிர்வாக அலகுவடக்கு-கிழக்கு பகுதிக்கு விசேட செயலணி அமைக்கப்படும் போது முஸ்லிம் பெரும் பான்மை பகுதிகளுக்கென தனியான விசேட செயலணி இவை போன்ற கோரிக்கைகளைமுன்வைத்தே தொடர்ந்தும் பகிஷ்கரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சிறுகுழுக்கள் மூலம் கடன் வழங்கும் திட்டம் காவலூரில் ஆரம்பம்

(காரைநகர்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் இம்மாதத்தில் மட்டும் 369 சிறுகுழுக்களும் 31 சமுர்த்திச் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன;

இப்பிரிவில் உள்ள 24 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் அமைக்கப்பட்ட இச்சிறுகுழுக்களில் இருந்து சுமார் 70 ஆயிரம் ரூபா சேமிக்கப்பட்டுள்ளதுடன் சிறுகுழுக்கள் மூலம் கடன் வழங்கும் நடவடிக்கையும் நடைபெற்றுவருகின்றது; (உ-246)

## மீளக் குடியமர்ந்தோருக்கு உடனடி உதவு தொகை வழங்க நடவடிக்கை

(காரைநகர்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர் வோரின் உடனடித் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முதற்கட்டமாக மீளக்குடியமர்ந்த 66 குடும்பங்களுக்கு 15ஆயிரம் ரூபாப்படி மீளக்குடியமர்வுத் தொகைவழங்கப்படவுள்ளது.

வதிவிடம் அமைக்கும் வகையில் 7ஆயிரம் ரூபாவும் உபகரண கொள்வனவுக்கு 1000 ரூபாவும், மீளக்குடியமர்வுப் படியாக 2 ஆயிரம் ரூபாவும், உற்பத்தி முயற்சிக்கென 5ஆயிரம் ரூபாவும் என இத்தொகை வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு 65ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில்மேலும் 50 ஆயிரம் ரூபாவழங்கப்படவுள்ளது.

இதேவேளை, இப் பிரிவில் 1400 குடும்பங்கள் இற்றைவரை மீளக்குடியமர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது; (உ'246)

## மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு விளக்குகள்

(காரைநகர்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த 125 குடும்பங்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தினால் விளக்குகள் வழங்கப்படவுள்ளன.

சிறுவர்களை அதிக அங்கத்தவர்களாகக் கொண்ட மிகவறிய குடும்பங்களுக்கே விளக்குகள் வழங்கப்படவுள்ளன; (உ-246)

## யாழ். மாணவர்களின் கணனி அறிவைமேம்படுத்த மாணவர் பேரவை முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அனைத்து கணனி பயிற்சி நிலையங்களின் ஆலோசனையைப் பெற்று யாழ். மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேச மாணவர்களின் கணனி அறிவினை விருத்தி செய்ய சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தீர்மானித்துள்ளது;

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று மு.ப. 11.00 மணிக்கு சர்வதேச மாணவர் பேரவையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது; (உ)

## மாநகரசபை குண்டு வெடிப்பு விசாரணை கொழும்பு நீதிமன்றில்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்திலேயே மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது;

இவ் வழக்கு விசாரணையை வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள விசேட உயர் நீதிமன்றில் விசாரணை செய்வதற்கு அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது

இருப்பினும் இவ்வழக்குடன் சம்பந்தப்பட்டவர்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு இணங்க, அதனை மீண்டும் கொழும்பு மேல்நீதிமன்றத்துக்கு மாற்றுவதென அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

ஜனாதிபதியை படுகொலை செய்ய முயன்றமை மற்றும் பலரை பலத்த காயங்களுக்கு உள்ளாக்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் சட்டமா அதிபர் 4 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## விமல் வீரவன்சவை 5 ஆம் திகதி லஞ்ச ஊழல் ஆணைக் குழு முன் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச அடுத்த மாதம் 5 ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு முன்னிலையில் ஆஜராக வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

மக்கள்விடுதலை முன்னணியின் வங்கிக் கணக்குதொடர்பான வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்வதற்காக நேற்று முன் தினம்இவரை லஞ்சஊழல் ஆணைக் குழுவில் ஆஜராக வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

தவிர்க்க முடியாதகாரணத்தால் நேற்றுமுன்தினம் ஆஜராக முடியாது எனவும வேறொரு தினத்தைபெற்றுத் தருமாறும்அவர் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்தே இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு வீரவன்சாவை அடுத்த மாதம் ஆஜராகுமாறு பணிப்புரை விடுத்துள்ளது. (உ - 8)

## முதியோர் தினம்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சர்வதேச முதியோர் தினம் இன்று பளை நகரில் இயங்கும் வேம்பொடுகேணி சீ. சீ. த. க; பாடசாலை மண்டபத்தில் மு; ப. 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

பிரதேசசெயலர் எஸ்.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் பிரதம விருந்தினராகவும், கிளிநொச்சி மாவட்டத்திற்கான வடகிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் எஸ். சுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்;

முதியோர் தினம் சம்பந்த

## தமிழீழ மாணவர் பேரவை ஏற்பாட்டில் க. பொ. த. (உ-த) வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2003 ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.(உ-த)

இக்கருத்தரங்கில்பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அதற்கான படிவத்தினை சர்வதேச

## வலி.வடக்கு மக்களின் கோரிக்கை நியாயமானது

### புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு மக்களின் சார்பாக அப்பிரதேச பொது அமைப்புகள் மீளக் குடியமர்வுக்காக முன்வைத்து வரும் கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானவைகளாகும்; அவற்றை நிராகரிப்பதற்குப்

வழங்குகின்றது;

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் கட்சி அரசியல் குழுசார்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில்;

னர் விமல்வீரவன்ச அடுத்த மாதம் 5 ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு முன்னிலையில் ஆஜராக வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுளது

மக்கள் விடுதலை முன்னணியின் வங்கிக் கணக்குதொடர்பான வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்வதற்காக நேற்று முன்தினம்இவரை லஞ்சஊழல் ஆணைக் குழுவில் ஆஜராக தால் நேற்றுமுன்தினம் ஆஜராக முடியாது எனவும வேறொரு தினத்தைபெற்றுத் தருமாறும்அவர் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்தே இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு வீரவன்சாவை அடுத்த மாதம் ஆஜராகுமாறு பணிப்புரை விடுத்துள்ளது.

(உ - 8)

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சர்வதேச முதியோர் தினம் இன்று பளை நகரில் இயங்கும் வேம்பொடுகேணி சீ. சீ. த. க; பாடசாலை மண்டபத்தில் மு; ப. 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

பிரதேசசெயலர் எஸ்.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் பிரதம விருந்தினராகவும், கிளிநொச்சி மாவட்டத்திற்கான வடகிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் எஸ். சுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முதியோர் தினம் சம்பந்தமான போட்டிகளில் வெற்றியீட்டிய பளைக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கலும் இன்று இடம்பெறவுள்ளது. (உ)

யிலுள்ள விசேட உயர் நீதி மன்றில் விசாரணை செய்வதற்கு அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது

இருப்பினும் இவ்வழக்குடன் சம்பந்தப்பட்டவர்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு

பலரை பலத்த காயங்களுக்கு உள்ளாக்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் சட்டமா அதிபர் 4 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# வலி.வடக்கு மக்களின் கோரிக்கை நியாயமானது

## புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு மக்களின் சார்பாக அப்பிரதேச பொது அமைப்புகள் மீளக் குடியமர்வுக்காக முன்வைத்து வரும் கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானவைகளாகும்.

அவற்றை நிராகரிப்பதற்குப் பதிலாக மக்களின் அடிப்படை வாழ்வுரிமையை வற்புறுத்தி நிற்கும் அக் கோரிக்கைகளுக்கு அரசாங்கமும் இராணுவ உயர் பீடமும் செவிமடுத்து மீளக் குடியமர்விற்கு வழிகளைத் திறந்து விடவேண்டும்.

அதுவே கடந்த பதினைந்து வருடங்களாகத் தமது சொந்த நிலபுலங்களையும் வீடுவாசல்களையும் தொழில்களையும் இராணுவ நிர்ப்பந்தங்களால் விட்டகன்று அவல வாழ்வு வாழ்ந்து வரும் வலி வடக்கு மக்களுக்குக் கிடைக்கக் கூடிய மிகப் பெரும் நிம்மதியும் ஆறுதலுமாகும்.

இதனை முன்வைத்து இடம்பெற இருக்கும் இன்றைய மக்கள் பேரணிக்கு புதிய ஜனநாயக கட்சி பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குகின்றது.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் கட்சி அரசியல் குழுசார்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில்; வலி வடக்கு மக்களின் மீளக் குடியமர்வுக்கு மறுக்கப்படும் காரணங்கள் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்ல.

மக்களின் அடிப்படை வாழ்வுரிமைக்கான ஜனநாயக மனித உரிமை மீறல்இது.

எனவே வலி வடக்கு மக்களின் மீளக் குடியமர்வுக்கான கோரிக்கைகள் நீதியானவற்புறுத்தலாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

### தமிழீழ மாணவர் பேரவை ஏற்பாட்டில்

# க. பொ. த. (உ-த) வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2003 ஏப்ரல் மாதம் நடைபெறவுளள க.பொ த( உ-த) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டற் கருத்தரங்குகள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்தவுள்ளது.

இக்கருத்தரங்கில்பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அதற்கான படிவத்தினை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக் காரியாலயத்தில் பெற்று நவம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுளளது. (உ3)

# அர்ப்பணிப்புடன் சேவைபுரிவோர் மற்றையோரால் போற்றப்படுவர்

## உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர்

(கோப்பாய்)

பதவியைநாடியும்-தேடியும் அலையும் இவ்வுலகில் இவை எவற்றையும் எதிர்பாராமல் பாடசாலைப் பற்றுடன் சமூக வளர்ச்சிக்காக சுயநலமற்ற வகையில்தம்மைஅர்ப்பணித்து தமது வாழ் நாளில் மற்றையோரால் போற்றத் தக்கோராய் வாழ்பவர்கள சிலரே. இன்றைய விழா நாயகர்கள் இதற்கு இலக்கணமாய்த்திகழ்கிறார்கள.

கடந்த 35 வருடங்களாக உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில்கல்விபபணியாற்றியதிருமதி சிவானந்தன்,திருமதி அ சீவரத்தினம் ஆகியோர்களை பாராட்டும் விழாவில் கலந்துகொண்ட உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் அ ஈஸ்வரநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலயஅதிபர் சு யோகராசா தலைமையில் பாடசாலைச்சமூகத்தினரால் நடாத்தப்பட்ட இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

ஒருவர் சமூகத்தில்எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பது முக்கியமல்ல,எவ்வாறு வாழ்ந்தார் என்பதே முக்கியம்.

வீடு சமூகம்.கிராமம், நாடு என்ற வகையில் நோக்கும் போது இவர்கள் மூன்று பரம்பரையினர்க்குகல்வியை வழங்கியபேறு பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

அன்பு, அறிவு, அடக்கம், பொறுமை மனிதநேயம் பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கு போன்ற பண்பாடுகள் இவர்களிடம் தனித்துவமாகக் காணப்பட்டன என்பதை இவர்களின் மாணவர்கள்வாயிலாக அறியும்போதுஇவர்களின் ஆசிரியர் பண்புகளின் தனித்துவத்தை உணரக் கூடியதாகவுள்ளதுடன்.இன்றைய ஆசிரியர்கட்கு இவைஎடுத்துக்காட்டாக அமையும் என்றார்.

(உ-79)

# சமாதானப் பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர முதல்வர் எஸ். கந்தையன்மற்றும்உறுப்பினர்கள்,ஊழியர்கள் அடங்கிய குழுவொன்று எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி தென்னிலங்கைக்கு சமாதானப் பயணம் மேற்கொள்ளவுள் ளது. (உ-9)

# நிவாரணம் கிடைக்காதோர் கவனத்திற்கு

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து குடாநாட்டில் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் தற்காலிகமாக வசிப்பவர்களில் தற்போது உலர் உணவு நிவாரணம் கிடைக்காதோர் இன்று புலோப்பளை வீதி அருகாமையில் இயங்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறும், வரும்போது தம் வசமுள்ள உலர் உணவு பங்கீட்டு அட்டைகளையும் எடுத்து வருமாறும் பளைப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (உ)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2002

**General Certificate of Education (Ord. Level) Model Examination - 2002**

**விவசாய விஞ்ஞானம்**
**மூன்று மணித்தியாலம்.**

Mrs.P. ஆனந்தராசா (ஆசிரியர்)
உரும்பிராய் இந்துக் கல்லூரி

## பகுதி 1

*பின்வரும் வினாக்களுக்குத் தரப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க*

01 மண்ணின் இரசாயனப் பண்பொன்றினால் மண்ணில் இடப்படும் வளமாக்கிகள் கழுவிச் செல்லப்படாது பற்றி வைத்திருக்கின்றன. அப் பண்பு யாது?
1.மண்ணின் PH 2.நேரயன் பரிமாற்ற இயல்பு
3.மண்ணின் நிறம் 4.மண்ணின் ஆழம்.

02. பின்வருவனவற்றுள் நெல்வயல்களில் அடிக்கட்டுப் பசளையாகப் பயன்படுத்தபடுவது யாது?
1.அமோனியம் சல்பேற்று 2.யூரியா
3.வி,கலவை 4.ரீ.பி.எம் கலவை.

03. மேல் மண் மிகவும் அரிக்கப்பட்ட நிலத்தைத் திருத்துவதற்கு யாது சேர்த்தல் நன்று?
1.சேதனப்பசளை 2.இரசாயன வளமாக்கி
3.சுண்ணாம்பு 4.ஜிப்சம்

04. நிலம் பண்படுத்தும் ஆழம் எதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது?
1.காலநிலை 2.மண்ணின் தன்மை
3.நீர்ப்பாசன முறை 4.பயிரின் வேர் வளர்ச்சி

05. தண்டு வெட்டுத்துண்டங்களை நடும் பொழுது இலைகளைக் குறைப்பது ஏன்?
1.பீடைத்தாக்கத்தைக் குறைக்க 2.ஒளித்தொகுப்பைக் குறைக்க
3.ஆவியுயிர்ப்பைக் குறைக்க 4.நோய்களைக் கட்டுப்படுத்த

06. உருளைக் கிழங்குப் பயிர் எதன் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது?
1.முகிழ் 2.குமிழ்
3.குமிழம் 4.உறிஞ்சிகள்

07. இராசவள்ளிக் கிழங்குப் பயிரில் கொடிக்கிழங்காக விருத்தியடையும் பகுதி எது?
1.கிளை 2.இலை
3.கக்க அரும்பு 4.பூ

08. யாழ்ப்பாணத்திற்கு அதிக மழையைத் தருவது எது?
1.தென்மேல் பருவக்காற்று 2.சூறாவளி
3.வடகீழ்ப் பருவக்காற்று 4.மேற்காவுகை

09. பயிர்ச்செய்கைப் போகங்கள் எதன் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளன?
1.பயிரின் வயது 2.நிலத்தின் அளவு
3.பீடைத்தாக்கம் 4.மழை வீழ்ச்சி

10. தாவரமொன்று வேர்வளர்ச்சி குன்றி இலைகள் ஊதா நிறமாகக் காணப்பட்டால் அதற்கு என்ன போசனைப் பதார்த்தக் குறைபாடு ஏற்பட்டுள்ளது?
1.பொட்டாசியம் 2.பொசுபரசு
3.நைதரசன் 4.கல்சியம்

11. பின்வரும் பூச்சி இனங்களில் பூரணமற்ற உருமாற்றமுடைய பூச்சி எது?
1.சந்துகுத்தி 2.நெல்மூட்டுப்பூச்சி
3.பழஈ 4.எப்பிலக்னா

12. தென்னை, இறப்பர் தோட்டங்களில் மூடுபயிர் பயிரிடப்படுவதன் பிரதான நோக்கம்?
1.மட்பாதுகாப்புக்கு 2.நீர் ஆவியாதலை தடுக்க
3.காற்றூட்டலை அதிகரிக்க 4.விலங்கு உணவிற்கு

13. நீர் வடிப்புக் கூடிய சரிவான தரைக்கு ஏற்ற நீர்ப்பாசன முறை எது?
1.பாத்திப் பாசனம் 2.தூவற்பாசனம்
3.சால் பாசனம் 4.பரவல் பாசனம்

14. சுழற்சி முறைப் பயிர்செய்கையில் பயிரிடுவதற்குப் பொருத்தமான பயிர்க் கூட்டம் எது?
1.வெங்காயம், பாசிப்பயறு, வற்றாளை, எள்ளு
2.மிளகாய், எள்ளு, வற்றாளை, குரக்கன்
3.வெங்காயம், பாசிப்பயறு, வற்றாளை, குரக்கன்
4.மிளகாய், குரக்கன், வற்றாளை, வெங்காயம்

15. அரும்பொட்டலுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு ஒட்டுக்கட்டைத் தாவரத்திற்கு இருக்க வேண்டிய முக்கியமான இயல்பு யாது?
1.கூடிய விளைச்சல் 2.தூய்மை
3.சிறந்த வேர்த்தொகுதி 4.நல்ல சுவை

16. பின்வரும் பயிர்க் கூட்டங்களில் எவை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை
1.உழுந்து, அவரை, நெல், புகையிலை
2.வெண்டி, புடோல், பூசணி, நெல்
3.கரட், கோவா, பயறு, சாமை
4.கத்தரி, தக்காளி, மிளகாய், புகையிலை

17. விலங்கு வேளாண்மைக்கு உதவி செய்யும் அரசாங்கத் திணைக்களங்கள் எந்த அமைச்சின் கீழ் உள்ளன?
1.விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி 2.உணவுக்கூட்டுறவு
3.கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி 4.புனர்வாழ்வு அமைச்சு

18. ஒரு விவசாயி தை மாதம் 10ம் திகதி மரக்கறிகளை 250 ரூபாவுக்கு விற்று 150 ரூபா பெறுமதியான வளமாக்கிகளை வாங்கினார். இது பதியப்பட வேண்டிய பண்ணை அறிக்கை எது?
1.பொருட்பதிவுப் புத்தகம் 2.காசுப் புத்தகம்
3.இலாப நட்ட அட்டவணை 4.பயிர்ச்செய்கைத் தாள்

19. மண் கூம்புகளில் நாற்றுக்களை வளர்க்கும் நாற்று மேடையின் பெயர் என்ன?
1.நெரிடோக்கோ 2.டபொக்
3.விதைப் பெட்டி 4.நாற்றுப்பெட்டி

20. குஞ்சுக் கலவைத் தீனில். எந்தச் சத்தைவழங்குவதற்காக மீனெண்ணெய் சேர்க்கப்படுகிறது?
1.புரதம் 2.மாப்பொருள்
3.கொழுப்பு 4.உயிர்ச்சத்து

21. குஞ்சுவதியில் முதல் வாரத்தில் இருக்க வேண்டிய வெப்பநிலை யாது?
1. $75^{0}f$ 2. $100^{0}f$
3. $95^{0}f$ 4. $105^{0}f$

22. கொச்சிடியோயிஸ் நோய்க்குரிய காரணி யாது?
1.வைரசு 2.ஒருகலவுரு ஒட்டுண்ணி
3.பக்ரீரியா 4.பங்கசு

23. குடற்புழுக்களை கட்டுப்படுத்த கோழிக்கு கொடுக்கப்படுவது
1.பிப்பரசின் 2.அசந்தோல்
3.கமக்சீன் 4.பென்சிலின்

24. கோழிக் கொள்ளை நோயின் காரணி
1.பக்ரீரியா 2.ஒட்டுண்ணி
3.வைரசு 4.குடற்புழு

25. ஐரோப்பிய கறவை இனத்திற்கு உதாரணம்
1.சிந்தி 2.கில்லாரி
3.சகிவால் 4.பிறீசியன்

26. இலங்கையின் கறவை வளர்ப்பை ஊக்குவிப்பது
1.கூட்டுறவுச்சங்கம் 2.கிராமிய வங்கி
3.பாற்சபை 4.மக்கள் வங்கி

27. பயிர்கள் பூத்தலில் அதிகளவில் செல்வாக்குச் செலுத்தும் காலநிலைக் காரணி
1.வெப்பநிலை 2.ஒளி
3.காற்று 4.ஈரப்பதன்

28. இலங்கையில் தென்னை ஆராய்ச்சி நிலையம் இருக்கும் இடம்
1.லுணுவில 3.பேராதனை
2.அகலவத்தை 4.கண்டி

29. தாவரங்களுக்குத் தேவையான போசணைப் பொருட்களும் நீரும் உறுஞ்சப்படுவது தாவர வேர்த்தொகுதியில் இருக்கும்
1.மூலவேர் மூலம் 3.வேர் முடிச்சு மூலம்
2.பக்கவேர் மூலம் 4.வேர் மயிர்கள் மூலம்

30. மிக எளிதாகக் கட்டுப்படுத்த முடியாத களை இனம் எது?
1.கோழிச்சூடான் 2.பூம்புல்
3.கோரை 4.குப்பைமேனி

31. முழுமைக்களை நாசினிக்கு உதாரணம்
1.யூரியா 2.கமக்சீன்
3.கிரமக்சோன் 4.லசோ

32. நைதரசன் - எஸ் எனப்படுவது
1.பக்ரீரியாக்கணம் 2.பூச்சிநாசினி
3.களைநாசினி 4.வளமாக்கி

33. பாலிலிருந்து நீரை அகற்றித் தயாரிக்கப்படுவது
1.பாற்கட்டி 2.யோகட்
3.கட்டிப்பால் 4.பால்மா

34. மின்னேரியாக் குளத்தைக் கட்டிய அரசன் யார்?
1.தாதுசேனன் 2.காசியப்பன்
3.மகாசேனன் 4.வசபன்

35. அடைப் பொறியில் அடை வைத்த முட்டை குஞ்சு பொரிக்க எடுக்கும் காலம்
1. 21நாள் 2. 1மாதம்
3. 1நாள் 4. 15 நாள்

36. தாவர வேரினால் உறிஞ்சப்பட்ட நீரானது இலைகளுக்கு கடத்தப்படுவது
1.உரியதினூடாக 2.காழினூடாக
3.மேற்பட்டையூடாக 4.மையவிழையத்தினூடாக

37. சேமித்து வைக்கும் வித்துக்களில் இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ஈரப்பதன்
1. 5 - 6 வீதம் 2. 10 - 14 வீதம்
3. 15 - 20 வீதம் 4. 20 - 25 வீதம்

38. ஹெறிங் மீன்முள்ளு முறை என்பது
1.நீர்ப்பாசன முறை 2.பயிர்ச் செய்கை முறை
3.நீர்வடிப்பு முறை 4.வித்துச் சிகிச்சை

39. இருவித்திலைத் தாவரங்கள் தரை மேல் முளைத்தல் உடையன இதற்கு உதாரணம்
1.தென்னை 3.சோளம்
2.நெல் 4.புளி

40. கடும்புப் பாலில் அதிகமாகவுள்ள சத்து எது?
1. கொழுப்பு 3.கனிப்பொருள்
2.புரதம் 4.மாச்சத்து

## பகுதி II

முதலாம் வினாவிற்கும் வேறு நான்கு வினாக்களுக்கும் விடை தருக

I) 1.இலங்கையின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதில் விவசாயம் பங்களிக்கும் ஐந்து விடயங்களைச் சுருக்கமாக விபரிக்க? **(1x5=05)**
2.பழ மரங்களை கத்தரிக்கும் நோக்கங்கள் ஐந்து தருக **(1x5=05)**
3.பண்ணைப் பதிவேடுகளை பேணுவதன் அனுகூலங்கள் மூன்று தருக பண்ணையில் பேணவேண்டிய நான்கு முக்கிய பதிவேடுகளைத் தருக **(1x3+1/2x4=05)**
4.பயிர்களில் ஏற்படும் நைதரசன் குறைபாட்டு அறிகுறிகள் மூன்று தருக நைதரசன் வளமாக்கிகள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றில் உள்ள நைதரசன் சதவீதத்தையும் தனித் தனியே தருக **(1x3+1/2x2+1/2X2=05)**

**(தொடரும்)**

## நேற்றைய கணிதத் தொடர்ச்சி..............

08. (அ) ரூ 7500 இற்கு 12 வருடங்களில் எளிய வட்டியாக ரூ 7425 கிடைத்தால் வருட வட்டி வீதம் எவ்வளவு?

(ஆ) ரூ 8000 இற்கு வருடம் 8.25% கூட்டு வட்டிப்படி 2 வருடங்களில் கிடைக்கும் வட்டி எவ்வளவு?

(14 புள்ளி)

09. (அ) காரணிப்படுத்துக: $3x-6y+x^2-4y^2$

(ஆ) தீர்க்க: 1) $\frac{C}{2}-\frac{V}{3}=0$ 2) $\frac{C}{4}-\frac{2V}{3}=5$

(இ) $x^2-5x+1=0$ என்ற சமன்பாட்டைத் தீர்த்து விடையை இரண்டு தசம தானங்களுக்குத் திருத்தமாக தருக.

(14 புள்ளி)

10. X,Y,Z ஆகிய குழாய்கள் சேர்ந்து ஒரு தொட்டியை 10 நிமிடங்களில் நிரப்பும் குழாய்கள் X,Y என்பன சேர்ந்து அதே தொட்டியை 15 நிமிடங்களில் நிரப்பும் X,Z ஆகியன சேர்ந்து அதனை 20 நிமிடங்களில் நிரப்பும்.

(அ) குழாய்கள் X,Y,Z என்பன சேர்நது ஒரு நிமிடத்தில் தொட்டியின் என்ன பங்கினை நிரப்ப முடியும்?

(ஆ) குழாய்கள் Y,Z என்பன சேர்ந்து ஒரு நிமிடத்தில் தொட்டியின் என்ன பங்கினை நிரப்ப முடியும்?

(இ) குழாய் X தனித்து ஒரு நிமிடத்தில் தொட்டியின் என்ன பங்கினை நிரப்பும்.

(ஈ) குழாய் X தனித்து தொட்டியை நிரப்ப எடுக்கும் நேரம் எவ்வளவு?
(14 புள்ளி)

நாளை ஆரம்பமாகவுள்ள 2-ம் கட்டப் பேச்சு

# உயர் பாதுகாப்பு வலயங்களை மாற்றுவது குறித்து பரிசீலனை

## இது விடயம் சற்று சிக்கலை ஏற்படுத்தலாம் என கருத்து

(கொழும்பு)

**நாளை தாய்லாந்தில் ஆரம்பமாகவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தைகளில் யாழ். குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யும் விடயம் முக்கியமாக இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

பேச்சுக்களில் அரசுதரப்புப் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளவர்களை நேற்று முன்தினம் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கலந்துரையடிய விடயங்களில் உயர்பாதுகாப்பு வலயம் முக்கிய இடம்பெற்றிருப்பதும்,

அரச தரப்பில் மூத்தபடை அதிகாரி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவும் புலிகள்தரப்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத் தளபதி கேணல் கருணாவும் கலந்துகொள்வதும் இதனை உறுதிப்படுத்துவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்,

இது இவ்விதமிருக்க படைத்தரப்பினால் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த காங்கேசன்துறை முகாம், பலாலி விமானத் தளத்தை அண்டிய வலிகாமம் பகுதி ஆகியவற்றை இடம் மாற்றுவதுஎன்பது அரசாங்கத்துக்குச் சிக்கலானவிடயம்.

தவிர கடுமையான பாதுகாப்பிற்குமத்தியில் அமைந்துள்ள பலாலி விமானத்தளம் பாதுகாப்புப் படையினரின் வடக்குப்பகுதியின் முக்கிய தளமாக விளங்குகிறது

எனவே, இதுவிடயத்தில் அரசு விட்டுக்கொடுப்புக்களைச்செய்ய வாய்ப்பில்லை.

இந்தநிலையில் மேற்படி உயர்பாதுகாப்பு வலய விவகாரம் இரண்டாம்கட்டப் பேச்சுக்களில் எடுத்துக்கொள்ளப்படுமானால் சென்றமுறையைப்போன்று பேச்சுக்கள் திருப்திகரமானதாகவும் சந்தோசமாகவும் அமைவது கடினமே எனவும் அரசியல் ஆய்வாளர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, சமாதான முயற்சிகளைப் படிப்படியாக முன்னெடுத்துச்செல்ல விரும்புவதால் உணர்வுபூர்வமான விடயங்களுக்கு இப்போதைக்கு முக்கியத்துவம் அளிக்க விரும்பவில்லையென இருதரப்புகளும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## கைதடி மேற்கில் பனைவிதை நடுகைத் திட்டம் அங்குரார்ப் பணம்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையால் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் 10 இலட்சம் பனம்விதைநடுகைத் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலகப்பிரிவில் கைதடி மேற்கு ஊரி மேட்டு நிலத்தில் நேற்றுமுன்தினம் 25ஆயிரம் பனம்விதை நடுகை திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தென்மராட்சிக் கோட்ட கொள்கை முன்னெடுப்புபிரிவு பொறுப்பாளர் செ; சிறிநாதி மங்கள விளக்கேற்றி நடுகைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

அங்கு சிறிநாத் உரையாற்றுகையில்,

போர்ச் சூழ்நிலை காரணமாக இப்பிரதேசத்தில் பல இலட்சக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இவ் அழிவானது இப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கு பொருளாதார ரீதியாக, பாரிய இழப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இதனை ஈடுசெய்வதற்கு இந்நடுகைத் திட்டம் அவசியமானதாகும்.

இது போன்ற நடுகைத் திட்டத்தினை பிரதேசம் முழுவதும் மேற்கொண்டு, இழந்ததை ஈடுசெய்வதுடன், இவ்வளத்தைப் பெருக்கிட எமது அடுத்துவரும் சந்ததியினருக்கு வழங்க வேண்டும்என்று குறிப்பிட்டார். (உ-9)

### அங்கத்துவத்தை உறுதி செய்க

(யாழ்ப்பாணம்)

சைவ சித்தாந்த பண்டிதர் சங்கத்தில் அங்கத்துவம் பெறாத சைவ சித்தாந்தபண்டிதர்களை சங்கச்செயலாளருடன் தொடர்பு கொண்டு தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறு செயலாளர் அ.இராஜரட்ணம் கேட்டுள்ளார். (உ-10)

## அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு சென்ற கூட்டமைப்பு பா. உ. தடுத்து நிறுத்தப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்பு கச்சேரிக்கு சென்ற கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜி கிருஷ்ணபிள்ளையை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராசசிங்கம் தலைமையில் மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டம் மட்டக்களப்புசெயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகசென்ற மேற்படி பாராளுமன்ற உறுப்பினரை இராணுவத்தினர் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

இதனையடுத்து யோசப் பரராசசிங்கம் எம்.பி. இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் ஜி கிருஷ்ணபிள்ளையை செயலகத்துக்குள் செல்ல அனுமதி பெற்றார்.

பின்னர் நடத்தப்பட்டகூட்டத்தில்இவரைத்தடுத்துநிறுத்திய இராணுவத்தினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை வழிமறிப்பது பிறப்புரிமையை மீறும் செயலாகும் இவ்வாறான அடாவடித்தனங்கள் இனிமேல் இடம் பெற அனுமதிக்கக்கூடாது. ஆதலால் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது உடன்நடவடிக்கை எடுக்க வேண்டும் எனகூட்டத்திற்கு சமுகமளித்திருந்த இராணுவ உயர் அதிகாரிகளிடம் யோசப் பரராசசிங்கம் கேட்டுக் கொண்டார்.

இச்சம்பவம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும், பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவுக்கும்அறிவிக்கப் போவதாகவும் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

### அணையா தீபம் ஏற்றல்

(புறக்கோட்டை)

நாட்டிற்கு நிரந்தரஅமைதி, சமாதானம் கிடைக்கும்வரை எரிந்து கொண்டிருக்கும் வகையில் புறக்கோட்டை புனித பிலிப்நேரிஸ் தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அணையா தீபம் ஏற்றிவைக்கப்பட்டது. (உ)

## மெய்கண்டதேவர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவசித்தாந்த பண்டிதர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும்4ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ளசைவபரிபாலன சபை மண்டபத்தில் 'மெய்கண்ட தேவர் குரு பூசை' நடைபெறவுள்ளது.

சைவசித்தாந்த பண்டிதர்களையும் சைவசமய அபிமானிகளையும் இதில் கலந்து கொள்ளுமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர். (உ-10)

## தூரநோக்குடன் செயற்பட இரு தலைமைகளும் தவறிவிட்டன

### கடற்றொழில் அமைச்சர்

(கொழும்பு)

தூர நோக்குடன் செயற்படத்தவறியமையே அரசாங்கத்துக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கும்இடையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளுக்கு காரணம் என கடற்றொழில் கடல்வள அமைச்சர் மகிந்த விஜய சேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இதன் காரணமாக ஜனாதிபதியுடன் கலந்துரையாட வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது.

பாராளுமன்றத்தை கலைக்கப் போவதில்லை என சபாநாயகர் ஊடாக ஜனாதிபதி எழுத்து மூலம் உறுதியளித்திருந்த நிலையில் 19 வது அரசியல் திருத்த சட்டமூலம் ஊடாக இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டமையானது, எந்தச்சிக்கலையும் தோற்றுவிக்காது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## முஸ்லிம் பிரதிநிதி பேச்சில் பங்கேற்காமைக்கு முஸ்லிம்காங்கிரஸ்கட்சியேகாரணமாம்

(கொழும்பு)

இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையிலும் முஸ்லிம்கள் சார்பாக பிரதிநிதியொருவர் பங்கு பற்றி கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கருத்துக்களை முன்வைக்கும் வாய்ப்பு இழக்கப்பட்டமைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையே காரணமாகும்.

முஸ்லிம் கல்விமான்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோர் இத்தகையதோர் குற்றச் சாட்டினை முன்வைத்துள்ளனர்.

கிழக்கின் பாதுகாப்பு கூட்டுச் செயலணி ஆகிய விடயங்களுக்கு பேச்சுவார்த்தைகளில் முன்னுரிமையளிக்கப்படவுள்ளநிலையில்முஸ்லிம்களின் பிரதிநிதி யொருவர் கலந்து கொண்டு தம்பக்க நியாயங்களைமுன்வைத்திருக்க வேண்டிய அவசியம் இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, அமைச்சர் ரவூப்ஹக்கீம் இம்முறையும் அரசதரப்புபிரதி நிதியாகவே பேச்சுக்களில் கலந்துகொள்வதும்,

இரண்டாம்சுற்றுப் பேச்சில் அவர் முஸ்லிம்களின் பிரதிநிதியாகக் கலந்துகொள்வார் என முன்னர் அரச வட்டாரங்கள் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

## திறப்பு கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளம் சந்திக்கு அருகில் இருந்து மோட்டார் சைக்கிள் திறப்பு ஒன்று நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகைக்காரியாலயத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ)

அவையறிந்து ஆராய்ந்து
சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை
யவர்:

குறள்

# வலம்புரி

## சமாதானப் பேச்சு---

நாளை 31 ந் திகதி அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சு வார்த்தை தாய்லாந்தில் ஆரம்பமாகிறது. இவ் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் முதலாம் கட்டப் பேச்சு வார்த்தையில் எட்டப்பட்ட முடிவுகளுக்கு மேலாக, நம்பிக்கை தரக்கூடிய- மக்களின் இடம் பெயர்வு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடியதான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமென்ற ஆவலில் மக்கள் காத்திருக்கின்றனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இரண்டாம் கட்டச் சமாதானப்பேச்சுக்கள் நாளை நடைபெறுகின்ற போதிலும், பேச்சு வார்த்தையில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில்பாதுகாப்புப்படை எந்தளவு தூரம் ஒத்துழைப்பு வழங்குன்றதென்பது கேள்விக்குரியதாகவேயுள்ளது.

அரச புலிப்பிரதிநிதிகள் தாய்லாந்தில் சந்தித்து இரண்டாவது தடவையாகப் பேசுவது சமாதானத்தின் நம்பிக்கையில் என்பதை எவரும் மறந்து விடக் கூடாது.

அத்தகையதோர் சமாதான நம்பிக்கை வலுப் பெற்றிருக்கும் போது இராணுவத்தினர் அதி உயர் பாதுகாப்பு வலயங்களைத் தளர்த்தாமல்- அப்பகுதி மக்களை மீளக் குடியமர்த்த அனுமதிக்காமல் தொடர்ந்தும் தடை விதிப்பது சமாதானப் பேச்சுக்களில் நம்பிக்கையீனத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது.

அரசும்- விடுதலைப் புலிகளும்செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பிரகாரம்தமிழர்தாயகத்தில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால் அத்தகையதோர் இயல்பு நிலையை மக்கள் அனுபவித்ததாகத் தெரியவிலலை.

எனவே சமாதானப் பேச்சு என்ற தொடர் நீண்டு செல்வதன் மூலம் தமிழ் மக்கள் எந்த நன்மையையும் அனுபவிக்க முடியாது.

மாறாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் எட்டப்படுகின்ற தீர்மானங்கள் உடனடியாக அமுல்படுத்தப்படுவதாகவும் அதன் நன்மைகளை இடம்பெயர்ந்த மக்கள் அனுபவிப்பதாகவும் இருக்க வேண்டும். அதற்கு நாளைய சமாதானப் பேச்சு வழி வகுக்குமா?

# குறிக்கோளுடன் வாழ்க்கையை அமைப்பவர் எண்ணத்தின் வலிமையினால் ஏற்றம் பெறுவர்

டாக்டர்
**எம். எஸ். உதயமூர்த்தி**

ஹக்குயின் என்ற புத்த ஞானியிடம் ஒரு புகழ் பெற்ற ஜப்பானிய நாட்டு வீரன் தன் சந்தேகம் ஒன்றைக் கேட்டான். ''குருவே, சொர்க்கம் என்றும், நரகம் என்றும் இருப்பது உண்மை தானா?'' என்று. ஹக்குயின் அவ் வீரனை நோக்கி, நீ யார்?'' என்று கேட்டார்.

''நான் நமது மாண்பு மிகு சக்கரவர்த்தியின் பாதுகாவலன்'' என்றான் அவன். ''அடே முட்டாளே! உன்னைப் பார்த்தால் பிச்சைக்காரன் போலத் தெரிகிறது. எந்த ராஜா உன்னை வீரனாக வைத்துக் கொண்டார்.?'' என்றார் ஞானி.

### வீரனுக்கு கோபம்பொங்கியது

வீரனுக்குக் கோபம் பொங்கியது. உடனேதன் உடைவாளை உருவினான். ஹக்குயின் கூறினார். ''ஓ! கத்தி வேறு வைத்திருக்கிறாயா? நான் பந்தயம் கட்டுகிறேன். என் தலையைக் கூட வெட்ட முடியாத அளவுக்கு அது மழுங்கியிருக்கும்'' என்று, வீரனுக்கு கோபம் பொங்கியது. உருவியகத்தியுடன் ஹக்குயின் முன் வந்தான். ''இப்போது உனக்குப் பாதிப் பதில் கிடைத்து விட்டது. நீ இப்போது நரகத்தின் கதவுகளைத் திறந்து விட்டாய்'' என்றார் புத்தகுரு.

வீரன் பின் வாங்கினான். உடைவாளைத்தன் உறையில் செருகினான். அவரை வணங்கினான். ''இப்போது உன் கேள்வியின் மறு பாதிக்குப் பதில் கிடைத்து விட்டது. நீ சொர்க்கத்தின் கதவுகளைத் திறந்து விட்டாய்'' என்று சொன்னார் ஹக்குயின். ஜப்பானியஞானி ஹக்குயின் பற்றிய இச்சிறு நிகழ்ச்சி சொர்க்கமும், நரகமும் நம்மிடம் தான் இருக்கின்றன. என்பதை அழகாகத் தெளிவு படுத்துகிறது. ஆம்? நாம் தான் நரகத்தை உருவாக்குகிறோம். சொர்க்கமும நரகமும் நம் மனத்தில் தான் இருக்கின்றன. அவை வெளியே இல்லை. அன்பு. இனிமை, உண்மை, மலர்ச்சி, வளர்ச்சி, உதவி, ஆரோக்கியம் என்ற எண்ணங்களை உள்ளே விடும் போது, நாம் சொர்க்கத்தை உருவாக்குகிறோம், வறுமை, பாவம், பயம் என்ற நோய் கொண்ட எண்ணங்களை உள்ளே விடும் போது நாம் நரகத்தை உருவாக்குகிறோம்.

### எண்ணங்களின் விளைவு

நம் மனம் ஒரு சொர்க்க வாசல். ஆகவே நல்ல எண்ணங்களை உயர் எண்ணங்களை உள்ளே விடுவதன் மூலம்நமதுவாழ்விலும்நாட்டுவாழ்விலும் நாம் அதிசயங்களைச் சாதிக்கலாம். நாம் இன்று எப்படியிருக்கிறோம். எந்த நிலையில் இருக்கிறோம் என்பது, நாம் இதுவரை நம்மைப்பற்றிக் கொண்டிருந்த எண்ணங்களின்விளைவு நமது எண்ணங்களின் உயரமே குறிக்கோளின் உயரமே-நமது உயரம். நமது குறிக்கோள் -நமது ஆசை எவ்வளவு சிறியதாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு நாம் சிறுக்கிறோம்.

தாலுக்கா ஆபிஸில்குமாஸ்தாவாக வேலை செய்து கொண்டு நமது எண்ணங்கள் அதைவிட்டுத்தாண்டாமல் இருந்தால், நாம் ஒரு மதிப்பிற்குரிய வயதேறிய தாலுக்கா ஆபீஸ் குமாஸ்தவாகப் பதவி ஓய்வு பெறுவோம் அல்லது தாலுக்கா ஆபீஸில் இருந்தாலும், நாட்டைப்பற்றிச் சிந்தித்தால் எண்ணங்களை வளரவிட்டால் ஒருநாள்நாம் நாட்டின் தலைவராக வளரமுடியும் உயரமுடியும்.

எண்ணமே முன்னேற்றத்தின் ஆணிவேர், எண்ணம் காந்தசக்தி கொண்டது. வசீகரிக்கும் தன்மை பெற்றது. ஆகவே நமது எண்ணங்கள் அதன் விளைவுகளைப் புறச் சூழ்நிலையில் உருவாக்கும். எங்கே போக ஆசைப்படுகிறோமோ அங்கே போக வழிபிறக்கும், பாதை அமையும்.

### குறிக்கோள் அவசியம்:

வாழ்க்கை எண்பது உள்ளிருந்து வெளியே போகும் செயல், என்கிறார்கள் அறிஞர்கள். நாம் அச்செயலைப் புரிந்து கொள்ள வேண்டும். விதை முளை எப்படித் தண்ணீர் பட்டவுடன் பூரித்து முளை விடுகிறதோ, அதே போலஎண்ணங்கள், மனதிலே வளம்பெற்று வெடிக்கவேண்டும். வெளிவரவேண்டும். இதற்கு நாம் உள்ளத்தைப் பயன்படுத்த வேண்டும். எண்ணங்கள் என்னும் போது, நம் மனதில் ஏற்படும் பலவித எண்ணங்களையும் நாம் பொதுவாகக் குறிப்பிடுகிறோம். அவை பரவி நிற்கின்றன. குறிக்கோள் என்னும் போது, நமது எண்ணங்கள் ஒரு கொள்கையைச் சுற்றி, ஓர் ஆசையைச் சுற்றிப் பின்னப்படுகின்றன. எண்ணங்களைப் பரவவிடாமல் நேர் படுத்தும் போது, அது ஓர் அமைப்பை - நெறியை அடைகிறது மனித வாழ்க்கையில் குறிக்கோள் அவசியம்.

ஊருக்குச் செல்லும் நாம் ரயில்வே நிலையத்திற்குச் சென்று, ''ஐயா? ஒருடிக்கட் கொடுங்கள்'' என்று கேட்பதில்லை. இன்ன ஊருக்குப் போகிறோம் என்று நம்மிடம் திட்டமிருக்கிறது. ஏதோ ஒரு ரயிலில் ஏறி உட்கார்ந்து கொண்டு, ஏதோ ஒரு ஊருக்குப் பயணம் செய்தவர்களை நாம் இதுவரைகண்டதில்லை. ஆனால் நம்மில் பலரோ ஒரு திட்டமில்லாமல் வாழ்க்கைப் பயணத்தைச் செய்கிறோம்.

### மனம் பொய்ப்பதில்லை

நாம் நம் மனதிற்கு ஒரு திட்டத்தை, ஒரு தெளிவை ஒரு குறிக்கோளைக் கொடுக்க வேண்டும். மனம் ஓர் அசாதாரணமான இயக்கம். நாம் அதனிடம் ஒரு தெளிவான குறிக்கோளைக் கொடுத்து விட்டோமானால் மனத்திற்கு உத்தரவு போட்டுவிட்டோமானால் நிச்சயம் நம்மை அது அந்த ஊருக்கு அழைத்துச் செல்லும். மனம் ஒன்றும் பொய்ப்பதில்லை, ஏமாற்றுவதில்லை.

எத்தனையோ துறைகளில் வல்லுநர்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். அவர்களில் யாரையாவது பார்த்து 'நீங்கள் எப்படி இவ்வளவு திறமை பெற்றீர்கள்? என்று கேட்டுப் பார்த்தால், அவர்கள் கதை, 'சின்னவயதிலேயே எனக்கு அப்படியொரு ஆசை உண்டு' என்று தான் துவங்கும் எண்ணங்கள் நெறிப் படுத்தப் படும்போது ஒழுங்குபடுத்தப் படுமபோது, அது குறிக்கோள் ஆகிறது - லட்சியமாகிறது.

அமெரிக்காவில் பொது மக்களிடம் ஒரு 'சர்வே' செய்யப் பட்டது. அதிலிருந்து கிடைத்த உண்மை அறிஞர்களை அதிர்ச்சி அடையச் செய்தது. கணக்கெடுப்பில் பதிலளித்த பாதிப்பேருக்குக் குறிக்கோள் என்று ஒன்றும் இல்லை.

### விதியை மாற்றலாமா?

கல்லூரியில படிக்கும்மாணவர்களை இதுபற்றி விசாரித்தோம், சுமார் கால்பகுதியினர்க்கு ஒன்றும் குறிக்கோளோ இலட்சியமோ இல்லை; மற்றொரு கால் பகுதியினருக்கு அவர்கள குறிக்கோளபற்றி ஒன்றும் தெளிவில்லை. குழப்பமான குறிக்கோள்களைக் கொண்டிருந்தனர்.

நமதுஊரில் இப்படிஒரு கணக்கெடுப்புசெய்தால் மிக்க பயன்தரும் தகவல்கள் கிடைக்கும். நமது ஊரில் தெருவில் போவோரை தெரிந்தவர்களைப் பார்த்துக்கேளுங்கள், பெரும்பாலும் அவர்கள் 'என்னவோ ஓடுகிறது ஆண்டவன் படியளககிறான' என்று கூறுவதைக் காணலாம். வாழ்க்கை ஒரு போராட்டம் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் பெரும்பாலானவர்களோ வாழ்க்கையை ஒரு நீரோட்டமாக எண்ணுகின்றனர்.

உண்மை என்னவெனில் வாழ்க்கையை நாம் எண்ணுகிறபடி, நாம் அமைக்கமுடியும் அதற்கு வேண்டிய மன உறுதியிருந்தால் திட்டங்களிருந்தால். இல்லாவிட்டால் நாம் அது போகிறபடிபோக வேண்டியதுதான்' வள்ளுவர் கூறுகிறார். விதியைப் புறமுதுகிடச் செய்யமுடியும் ஒரு குறிக்கோளைநோக்கி ஓயாது உழைத்தால் என்று வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாதவர்களுக்குக் குறிக்கோள் ஏதும் இருப்பதில்லை.

குறிக்கோள் என்பது வெறும் ஆசையல்ல. ஆசைக்கு மேல் அதிகம் நமக்கு ஈடுபாடு இருக்கவேண்டும். நம் குறிக்கோளை நாம் வடிவத்தில் காணவேண்டும். உடலால் உணரவேண்டும். ருசிக்க வேண்டும். நுகரவேண்டும். நாம் அறத்துடன் வாழவேண்டும். நீருக்குள் அமுங்கியிருப்பவன் வெளியேவர எப்படித் துடிக்கிறானோ அத்தகைய வேகம் நமக்கு இருககவேண்டும் என்று விவேகானந்தர் கூறினார். அத்தகைய துடிப்பை குறிக்கோள் அடையுமபோது, எண்ணங்கள் சித்தியாக, சாதனைகளாக மலர்கின்றன.

## தினசரி தியானம்

### ஆன்ம நெறி

ஒருவரிடம் இலேசாக உலகப்பற்று இருந்தாலும், அவரால் இறைவனைக் காணமுடியாது. தீக்குச்சிகள் நனைந்திருந்தால் அவற்றைத் தீப்பெட்டியில் உரசும்போது ஆயிரங்குச்சிகள் இருப்பினும், ஒன்று கூடப் பற்றிஎரியாது; இதுபோலவே, உலகப்பற்றில் ஊறி மயக்கம் கொண்டிருக்கும் மனத்தால் இறைவனைக் காணவே முடியாது; அலுவலகப் பணிகள், வியாபாரம் முதலியவற்றில் ஈடுபட்டிருக்கிறவர்கள் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். இதுவே கலியுகத்தின் ஆன்ம நெறியாகும்.

சுவாமி சிவானந்தர்

## கண்ணிவெடி அகற்றிய குழு நாடு திரும்பியது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் தென்மராட்சிப் பகுதியில் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ரொங்கோ நிறுவனம் தமது பணிகளை பூர்த்தி செய்து கொண்டு நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளது.

அமெரிக்க ரொங்கோ நிறுவனம் மொசாம்பிக் நாட்டினைச் சேர்ந்த கண்ணிவெடி அகற்றும் நிபுணர்களையும் அமெரிக்காவின் நவீன உபகரணங்களையும் கொண்டு கண்ணி வெடி அகற்றும் பணியை கடந்த மே மாதம் முதல் சரசாலைப் பகுதியில் மேற் கொண்டு வந்ததும், சரசாலை வடக்கில் 75 ஆயிரம் ச.மீ பரப்பில் இருந்து 989 மிதி வெடிகளையும், சரசாலை தெற்கில் 20 ஆயிரம் ச மீ. பரப்பில் இருந்து 121 மிதி வெடிகளையும மற்றும் வெடிபொருட்களையும் முற்றாக அகற்றி கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் அப்பிரதேசத்தை ஒப்படைத்தமை குறிப்பிடத்தக்கது; (க-10)

### மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முதல்வர் எஸ். கந்தையன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (உ-9)



நேற்றைய தினம் யாழ் செயலகத்தில் யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற உயர் மட்டமாநாடு
படங்கள்: ஜெயகாந்தன்

## அரச- புலிப்...

தையில் கலந்து கொள்ளும் அரச தரப்புப் பிரதிநிகளுக்கு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமை தாங்குகின்றார்.

அமைச்சர் பேராசிரியர் ஜீஎல்.பீரிசுடன் அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம், சமாதான செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணத்திலகா ஆகியோர் செல்கின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள் ளும் பிரதிநிதிகள் குழுவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைமை தாங்குகின்றார்.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் முதலாம் கட்டப பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட திருமதி அடேல் பால சிஙகமும சட்டத்துறை ஆலோசகர் வி.உருத்திரகுமார், புனர்வாழ்வு நிபுணர் ஜோய் மகேஸ்வரன் ஆகி யோருடன் விடுத லைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா ஆகியோரும் இம்முறை பேச்சுவார்த்தையில் முதன் முறையாகக் கலந்து கொள்கின்றனர்.

இவர்களுடன் சு.ப.தமிழ்ச்செல்வனின் உதவியளர்கள் அலெக்ஸ், நிதியான் தொல்காப்கபியன் ஆகியோரும் செல்கின்றனர்.

சமாதானப் பேச்சுவார்த்தையில கலந்து கொள்ளும் அரசு,புலிகள தரப்புப் பிரதிநிகளும் ஒன்றாக இன்று அதிக லை 2.20 மணிக்கு ''கதேபசுபிச'' விமானத்தில் தாய்லாந்துககுப் பயணமாகியுள்ளனர்.

### பேசப்படவுள்ள முக்கிய விடயங்கள்

நாளை நடை பெறவுள்ள இரணடாம் கட்டப் பேச்சுவார்த்தையில் அரசு-புலிகள் இணைந்த கூட்டுச் செயலணிஅமைப்பது தொடர்பாகவும்,கண்ணிவெடி அகற்றல், உயர் பாதுகாப்பு வலய இட மாற்றம்,மற்றும் மீள் குடியேற்றம் ஆகிய முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

நாளை நடை பெறவுள்ள இரணடாம் கட்டப் பேச்சுவார்த்தை நவம்பர் மாதம் 3ம் திகதிவரை தொடர்ந்து நான்கு தினங்கள் நடைபெறவுள்ளது. (ம)

## பெண் புலிப்....

தெரியவருகின்றது.

இது குறித்து விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவினர் ஆட்சேபம் தெரிவித்ததுடன் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிற்கும் முறைப்பாடு செய்தனர்.

கண்காணிப்புக் குழுவின் தலையீட்டை அடுத்து தலைவரின் படத்துடன் இரு பெண் போராளிகளும் வேலணை செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். (இ)

## அரசியல்.....

மக்களுக்கு அசௌகரியம் ஏற் படுத்தும் வகையில் வீதிகள், சந்தி கள்,சந்தைகள் மற்றும் பொது இடங் களில் வெடி கொழுத்திப் போடுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக் கப்படும் என்று அவர்கள் எச்சரித் துள்ளனர்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற இவ்வாறான விரும்பத்தகாத சம்ப வங்களினால் பொது மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர் நோக்கியதையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (த)

## சமாதானப்...........

பெருந் தெருக்கள் அமைச்சர் அதாவுல்லா நேரடி தொலைக் காட்சிப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

நேற்று நள்ளிரவு ஸ்வர்ணவாகினி தொலைக்காட்சியில் இந் நேரடி உரையாடல் இடம் பெற்றது இந்த உரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டணி எம்.பி கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கலந்து கொண்டார்.

இப்பேட்டியில் அமைச்சர் அதாவுல்லா மேலும் தெரிவித்திருப்பதாவது:

நாம் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதன் மூலம் சமாதானத்திற்கு எதிரானவர்கள் அல்ல அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானத்தை நாம் ஆதரிக்கின்றோம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு கிழக்கு தற்காலிக இணைவு என்று இருப்பதனால் தான் நாம் முஸ்லிம்களுக்கு தனியலகைக் கோருகின்றோம். வடக்கு கிழக்கு பிரிந்திருக்குமானால் முஸ்லிம் மக்கள் தனி அலகு கோரமாட்டார்கள்.

இந்நிலையில் தாய்லாந்து பேச்சுவார்த்தையின் வெற்றிக்கு இப்போதைய சூழ்நிலையில் தேசிய அரசு ஒன்று அமைவதே சிறந்ததாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

## வலிவடக்கு....

வர்த்தக சமூகத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பேரணி ஏற்பாட்டாளர் அழைப்பு விடுத துள்ளனர்.

வலி வடக்கு மக்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி, அகிம்சை வழியில் போராட்டங்கள் பல தடவை இடம் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வலிவடக்கு மக்கள்யுத்த அனர்த்தத்தால் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறி, 12வருடங்களுக்கு மேலாக அகதி முகாம்களிலும், பொதுக் கட்டடங்களிலும் வாடகை வீடுகளிலும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கஷ்டமான வாழ்க்கையை நடத்தி வரு கின்றமையை இங்கு சுட்டிக் காட்டத் தக்கது.

இதேவேளை இன்றைய எழுச்சிப் பேரணிக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## யாழ். செயலகத்தில்..

பகுதிக்கான கடற்படை கட்டளை அதிகாரி உபேசிங்கா 55வது பிரிகேட்டைச் சேர்ந்த பிரிகேடியர் எதிரிசிங்கா மற்றும் மருதங்கேணி, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை பிரதேச செயலகர்கள் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் காரைநகர் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள், நாகர்கோவில் பகுதிக் பொது அமைப்புக்களின் பிரதிநிகள் மற்றும் வலிவடக்கு பிரதேசப் பிரதிநிதிகளும் பங்கு கொண்டு தமது பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறினர்.

இம் மாநாட்டில் காரைநகர் மீன வர்களின் பாஸ் பிரச்சினை பற்றி ஆராயப்பட்ட சமயம், பாஸ் நடை முறையை பாதுகாப்புக் காரணங் களை முன்னிட்டு உடனடியாக நீக்க முடியாது என வட பகுதிக்கான கடற்படைக் கட்டளை அதிகாரியான கமாண்டர் உபேசிங்கா தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து காரைநகர் பகுதி மீனவர்களின் நன்மை கருதி காரைநகர்க் கட்டளை அதிகாரி ஊர்காவற்றுறை பிரதேச செயலர்,காரைநகர்ப் பகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து கூட்டமொன்றைக் கூட்டி ஒரு இணக்கமான நடைமுறையை அறிமுகம் செய்யலாம என மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை காரைநகர்ப் பகுதி மீனவர்களை மாதகல் கடற்பிரதேசத்தில் ஆழ்கடல் மீனபிடியில் ஈடுபட விருப்பம் கொண்டுள்ளீர்களா என சம்பந் தப்பட்டவர்களிடம் வினாவப்பட்ட சமயம் தாம் அதை விரும்பவில்லை எனக் கூறப்பட்டது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரதேசத்தில் உள்ள நாகர் கோவில் பகுதியில், நாகர்கோவி லையும் அப்பகுதியிலுள்ள வீடுகளையும் பார்வையிடவும் அப்பகுதி மக்களை அனுமதிக்கும் படி பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு முதற் கட்டமாக நாகர்கோவிலில் மீள்குடியேற்ற முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஏழு பேருக்கு அனுமதி வழங்கப்படும் எனவும் ஏனையோருக்கு பாதுக்காப்புக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தற்போது அனுமதி வழங்கப்படமாட டாது எனவும படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அம்பன் அரசினர் கிராமிய வைத்தியசாலையை மக்களின் நன்மைகருதி பயன்படுத்த அனுமதிக்கும் படி யாழ்.மாவட்ட அரச அதிபரால் கோரப்பட்ட போது இது விடயம் பற்றி 3-4 தினங்களில் உறுதியான முடிவு அறிவிக்கப்படும் என்று படைத் தரப்பால் கூறப்பட்டது.

அதனையடுத்து வலிகாமம் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வீமன்காமம் மகாவித்தியாலயத்தை மீள ஆரம்பித்தல் பற்றியும் அப்பகுதியில் விவசாயம் செய்ய அனுமதித்தல் பற்றியும் பாராளுமன்றஉறுப்பினர் மாவை. சேனாதிராஜா சுட்டிக் காட்டிய போது,

பாதுகாப்புக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இதனை உடனடியாக அனுமதிக்க முடியாத நிலை படைத்தரப்பினருக்குஉள்ளதாகக் குறிப்பிடப் பட்டது.

அதேவேளை தெல்லிப்பழைச் சந்தியில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடியைச் சற்றுத் தூரம் பின்னுக்கு அகற்றுவது தற்போதைக்கு சாத்தியமில்லை எனவும்;,

பலாலி இராஜேஸ்வரி அம்மன கோவிலுக்குச் சென்று பூசை வழிபாடுகளை மேற்கொள்ள குருக்கள் மற்றும் இரண்டு உதவியாளர்கள மற்றும் குடும்ப உறுப்பினர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடபகுதிக் கடற்பிரதேசத்தில் இந்திய மீனவர்களால் தமிழ் மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்ட சமயம், தமிழ் மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து கடற்படையினரிடம் யாரும் முறைப்பாடு செய்வதில்லை எனவும் இதனை எதிர்காலத்தில் தவிர்க்கும் பொருட்டு கடற்படையின 50 நிலையங்களில் முறைப்பாட்டுப் புத்தகங்கள் வைக்கப்படவுள்ளன எனவும் அதில் தாக்கப்பட்ட மீனவர்கள் தமது முறைப்பாடுகளை பதிவு செய்யலாம் எனவும் கூறப்பட்டது.

இது இவ்வாறு இருக்க கொழும்புத்துறை பகுதியில் விநாயகர் ஆலயச் சுற்றாடலில் புத்தர் கோவில் ஒன்று அமைக்கப்படுவதாக பிரஸ்தாபிக்கப்பட்டபோது அதுபற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று படைத் தரப்பில் கூறப்பட்டது. (உ-77)

## யாழ். உயர் தொழில் நுட்ப மாணவர்கள் இன்று பேரணி

(யாழ்ப்பாணம்)

யாழ் உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு நிரந்தரக் காணி ஒன்றைப் பெற்றுத் தருமாறு கோரி இன்று மாணவர் பேரணி ஒன்று நடை பெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன முன்றலில் இருந்து ஆரம்பமாகும் இப்பேரணி பலாலி வீதியூடாக ஆஸ்பத்தி வீதியை அடைந்து அங்கிருந்து யாழ் செயலகத்தைச் சென்றடையவுள்ளது.

பேரணி முடிவில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா கல்வி அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு ஆகியோருக்கு கையளிபபதற்கான மகஜர்கள் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதன் பிரதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் வழங்கப்படவுள்ளன. (த-5)

## விடுதலைப்புலி.......

திருமதி அடேல் பாலசிங்கம், மட்டு. அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் கருணா ஆகியோர் ஒரு உலங்கு வானூர்தியிலும்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், சட்ட ஆலோசகர் வி. உருத்திரகுமார், அபிவிருத்தித்துறை நிபுணர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோருடன் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனின் உதவியாளர்கள், அலெக்ஸ், நிதியோன், தொல்காப்பியன் ஆகியோர் மற்றொரு உலங்கு வானூர்தியிலும் பயணமானார்கள்.

### மூத்ததளபதிகளும் முக்கிய பிரமுகர்களும் வழியனுப்பினர்

கொழும்பு பயணமான விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி பொட்டு, லெப் கேணல் குட்டிசிறி பீரங்கிப்படையணி சிறப்புத்தளபதி கேணல் பானு, வடபோர் முனைக்கட்டளைத் தளபதி கேணல் தீபன், மாலதி படையணிச் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, சோதியா படையணி சிறப்புத்தளபதி கேணல் துர்க்கா, மட்டு அம்பாறை சிறப்புத்தளபதிகளில் ஒருவரான றாபேர்ட், புலிகளின் முக்கிய பிரமுகர் வே. பாலகுமாரன், காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தளபதி பாப்பா, முல்லை மாவட்ட அரசியத்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் உட்பட பல போராளிகளும் பெரும் திரளான பொதுமக்களும் ஆராவாரத்துடன் கையசைத்து வழியனுப்பி வைத்தனர்.

நேற்று மாலை 4.25மணிக்கு கொழும்பு பயணமான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கட்டு நாயக்க விமானநிலைய விடுதியில் தரையிறங்கினர். அவர்கள் தரையிறங்கிய இடம் பலத்த பாதுகாப்புக்குட் படுத்தப் பட்டுள்ளதாக கொழும்புச் செய்துகள் தெரிவிக்கின்றன. (ம)


# பிறந்தநாள் வாழ்த்து

இன்று 8வது பிறந்த நாளை ஜேரமனியில் கொண்டாடும் சுந்தரலிங்கம் விஜயகுமாரி தம்பதிகளின் செல்வப்புதல்வன்



## விதுர்ஷன்

பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்*
அம்மம்மா,மாமாமார்
அத்தைமார்,மச்சான் மச்சாள்மார்

திரு. இ.ஆறுமுகம்
பழைய வீதி
கோப்பாய் தெற்கு



# விளையாட்டு முகாமையாளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து (சகல துறை விளையாட்டுக்களுக்கும்) விண்ணப்பங்கள் 10.11.2002க்கு முன்னர் பெறப்படவுள்ளன. 50 வயதுக்கு மேற்படாத திடகாத்திரமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

*செயலாளர்*
*ஹாட்லிக் கல்லூரி பழைய*
*மாணவர் மன்றம்*
*பருத்தித்துறை*

[C/5190]



சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
சுத்தமான நல்லெண்ணெய்

# V.S.P லங் ஒயில்

தயாரிப்பாளர்

26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.